
# வன்னியூர்க் கவிராயர்
# கவிதைகள்



தொகுப்பு
திருமதி.நெலோமி அன்ரனி குரூஸ்

# வன்னியூர்க் கவிராயர் கவிதைகள்

தொகுப்பு

திருமதி.நெலோமி அன்ரனி குருஸ்

நூல் தலைப்பு :- வன்னியூர்க் கவிராயர் கவிதைகள்
வகை :- கவிதை (தொகுப்பு)
ஆசிரியர் :- திருமதி.நெலோமி அன்ரனிகுரூஸ்
பதிப்பு ஆண்டு :- 2015
வெளியீடு :- வன்னியூர்க் கவிராயர் கலை இலக்கிய பேரவை
இலுப்பைக்குளம், நேரியகுளம்.
அச்சிட்டோர் :- அகரம் பிறின்டேர்ஸ்
விலை :- ரூ.பா 150.00
ISBN :- 978-955-99420-6-1
Bar code :- 9789559942061

# வெளியீட்டுரை

கவிஞர் நாவண்ணனின் புதல்வியாகிய திருமதி அ.நெலோமி தந்தையைப் போலவே கலைத்துறையில் ஈடுபாடு கொண்டு கவிதை சிறுகதை போன்றவற்றைப்படைத்து வருகின்றார். ஆத்மாவின் இராகங்கள் என்னும் கவிதை நூலில் தொடங்கி இதுவரை ஏழு நூற்படைப்புகளைத் தந்துள்ளார்.

இவரின் அடுத்த முயற்சியான வன்னியூர்க் கவிராயரின் கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றை பத்திரிகைகள் சஞ்சிகைகளில் இருந்து தேடித் தொகுக்கும் இலக்கியப்பணி போற்றுதற்குரியது.

அந்தவகையில் அவரது தேடல் முயற்சியில் சிக்கிய சிறுகதைகள், கவிதைகள் என்பவற்றைத் தனித்தனித் தொகுப்பாக்கியும், கவிராயர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊரான இலுப்பைக்குளம் கிராமம் தொடர்பான வரலாற்றையும் தொகுத்து மூன்று நூல்களாக்கியுள்ளார். இத்துடன் வன்னியூர்க்கவிராயர் கலை இலக்கியப் பேரவையின் முயற்சியால் ஈழத்துக் காவிய தீபகத்தின் மீள் பிரசுரமும், விழாச்சிறப்பு மலரும் வெளியிடப்படுகின்றது.

பல நூல்களை வெளியிட வேண்டும் என்ற கவிராயரின் கனவினை நிஜமாக்கும் வகையில் நெலோமி அவர்கள் தொகுத்துள்ள **'வன்னியூர்க் கவிராயர் கவிதைகள்'** என்னும் நூலை வெளியிட்டு வைப்பதில் வன்னியூர்க்கவிராயார் இலக்கிய மன்றம் பெருமகிழ்வடைகின்றது. கவிராயருக்குச் சிலையெடுக்கும் பெருவிழாவையொட்டிய நிகழ்விலேயே இந்நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியாகும். இவரின் பணி மேலும் தொடர வன்னியூர் கவிராயர் இலக்கிய மன்றம் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

அ.அன்ரனிகுருஸ்
தலைவர்
வன்னியூர் கவிராயர் கலையிலக்கியப் பேரவை
இலுப்பைக்குளம்,நேரியகுளம்
*06.06.2015*

## முதலுரை

கவிதை இலக்கியங்களின் முதல்வடிவம் எண்ணங்களையும் உணர்வுகளையும் அவ்வப்போது பெற்றுக்கொண்ட தாக்கங்கள் விளைவுகளது வெளிப்பாடாக வெளிப்படுத்தி பதிவு செய்யக்கூடிய சிறந்த கலைவடிவம். அதிகளவானோரால் இலகுவாகக் கையாளக்கூடியதாகக் கருதப்படும் இவ்விலக்கியம் அவ்வளவு இலகுவில் கையாளமுடியாத கூறுகளையும் மொழி வடிவத்தையும் தன்னகத்தே கொண்டிருப்தையும் யாரும் மறுத்துவிட முடியாது. கவிதைக்கொரு மொழியுண்டு. அதைக் கண்டுபிடித்து தனதாக்கிக் கொள்வதே கவிஞன் வேலை. அதாவது சொற்களின் தெரிவு, அவற்றின் அமைப்பொழுங்கு இதனூடாக ஏற்படும் ஓசையமைதி என்பவற்றினூடாக கருத்தினைப் பூரணமாக்கி வாசகரைச் சிந்திக்கும் நிலைக்கு இட்டுச்செல்வது கவிதையின் மொழியாகும். இவ்வகையில் மொழியின் வீரியமும் ஆழமும் கவிதைக்குள் பிணைந்து கிடக்கிறது. கவிதையின் மொழிபற்றிய இந்தப் பார்வையோடு வன்னியூர்க் கவிராயரின் கவிதைகள் மீது கவனத்தைச் செலுத்தி, ஈழத்துக் கவிதைப் பரப்பில் இக்கவிதைகள் எந்த இடத்தில் எந்த நிலையில் இருக்கிறது என்பதை இந்தச் சிறிய கண்ணோட்டத்தின் மூலம் முன்வைக்க விளைகிறேன்.

எமது நீண்ட தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் யாப்பிலக்கண கட்டுப்பாடுக்குள் இருந்து மெதுமெதுவாக மாற்றமும் புதுமையும் கண்டு புதுக்கவிதை வரலாறாக இன்று பரிணமித்துள்ளது. இவ்வகையில் ஈழத்து கவிதை வரலாற்றை நோக்கும் போது தமிழ்நாட்டில் பாரதியோடு கவிதைப் பாரம்பரியத்தில் ஏற்பட்ட மாற்றம் ஈழத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இம்மாற்றம் 1950களில் ஈழத்திலே கவிதை மீது குறிப்பிடக் கூடிய தாக்கங்களை வெளிப்படுத்துவனவாக உள்ளது. இக்காலத்தில் ஈழத்தில் சிறந்த கவிஞர் பரம்பரை ஒன்று உருவாகியிருந்தது. மகாகவி உருத்திரமூர்த்தி, நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி, சாரதா போன்றோரும் இவர்களைத் தொடர்ந்து முருகையன், நீலாவணன் என்போரும் இங்கு குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இக்காலத்தின் முற்போக்கு இலக்கியப் போக்கும் மரபு சார் போக்கும் ஒன்றையொன்று தழுவியும் முரண்பட்டும் வளர்ந்து வந்திருக்கின்றது. வன்னியூர்க் கவிராயர் அவர்களையும் இக்காலத்தில் எழுச்சி பெறுகின்ற ஒரு கவிஞராகத்தான் நாம் இங்கு இனங்காண்கின்றோம்.

ஈழத்து கவிதை வரலாற்றிலே வன்னியூர்க் கவிராயர் வாழ்ந்த காலம் முக்கியமான கால கட்டமெனினும், அவர்தன்னை வெளிப்படுத்துவதற்கு சாதகமற்ற பல புறச்சூழலுக்குள் இருந்து தனது கவிதைகளைப் படைத்துள்ளார் என்பது அறியக் கூடியதாக இருக்கிறது. வாழ்ந்த கிராமம் போக்குவரத்து வசதிகள், பாடசாலை வசதிகள், அறிவுடையோர் சந்திப்பு என்பவற்றுக்கு கவிராயருக்கு வாய்ப்புக் கொடுத்தளவு குறைவாகவே இருந்திருக்கும். எனினும் அவர் கவிதைப் பாடுபொருள்கள் காலச்சூழலையும் நாட்டுச்சூழலையும் மானிட நடத்தைகளையும் மிகத்துல்லியமாக எடுத்தியம்பி நிற்பனவாகும். வன்னியூர்க் கவிராயரின் இத்தொகுப்பிலே சிறியதும், பெரியதுமாக 41 கவிதைகள் உள்ளடங்கியுள்ளன. இவை மரபு சார்ந்தவையாக புலமைமிக்க ஒருவரின் படைப்புக்களாக மிளிர்கின்றன. வாழ்த்துக்கள் இதய அஞ்சலிகள், பாராட்டுக்கள், நாகபந்தங்கள், ஆறாரச்சக்கரம் என்பனவாகப் பல கவிதைகள் காணப்படுகின்றன. சில கவிஞரின் பொதுப்பார்வையிலான சமூகக் கேடுகள், கொடுமைகளுக்கு எதிரான குரலாக தமிழர் தொன்மைகளைக் கூறுவனவாக தமிழர் அரசியல் நிலைமைகளை இயம்புவனவாக இருக்கின்றன. இவரது கவிதைகளில் வெளிப்படும் உணர்வுகளாக தமிழ்மொழிப்பற்று, பண்பாடு, கலாசாரம் மீதான பற்று தமிழ் அரசியல் பற்றிய அலாதியான பார்வை, அன்றைய தமிழ்தலைமைகள் மேலான மரியாதை, இயற்கை அழகு, சமரசமான சமயப் பார்வை என்பவற்றைக் கூறலாம். சொல் கொண்டு தீட்டப்படும் இவரது கவிதைகளின் உணர்வு வெளிப்பாடுகளுக்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல பின்வரும் கவிதையை நோக்கலாம்.

உணர்ச்சியுயிர் உள்ளத் துறைந்தினிக்கு மன்பே

கணம் பிரியாக் கட்டிக்கரும்பே-நினதாவி
யான்நீ யெனதுயிர்ஏ காந்தத் திருக்கையிலும்
ஏன் இந்த வெட்கம் இனி.

யாப்பிலக்கண வரம்பை அனுசரித்து மரபுசார் செய்யுள்களாக விளங்கும் கவிராயரின் கவிதைகள், வெண்பா, விருத்தம் ஆகிய பாவகையிலும் ஆங்காங்கு நவீன கவிதை இயல்புகளையும் உள்வாங்கிக் காணப்படுகின்றன. கட்டிறுக்கமான வரிகள் அலங்காரமற்ற, ஆரவாரமற்ற மற்றவரை மருட்கை செய்யும் மொழிநடை இயல்பான அணி என்பன மூலம் கவிதைகள் மெருகேறிக்கிடக்கின்றன.

பிறர்குற்றம் கண்டுதன்னைப் பேணித் திருத்தி
அறமன்பை ஆயுதமாகக் கொண்டு - குறள்நெறியில்
மானிடர்க ளோர்குலமாய் மாண்புடனே வாழுமந்நாள்
நானிலத்தை வாழ்விக்கும் நாள்.

கவிராயர் வாழ்ந்த காலம் இலங்கைச் சுதந்திரத்துக்குப் பின்னரான அரசியல் சூழ்நிலையை அனுபவித்த காலமாகும். இக்காலத்தில் தமிழர்/தமிழ்மொழி மீதான சிங்கள அரசியல் சார்ந்த அடக்குமுறை வெளிப்படையாக வெளிப்பட்டது. இதன் ஒரு வெளிப்பாடாக சிங்களம் அரச கருமமொழியாக்கப்பட்டது. (1958) இதன் விளைவாக "ஸ்ரீ" எழுத்துப் பிரச்சினையும் வாகனங்களின் இலக்கத்தகடுகளில் வந்தது. இதைப் பின்வருமாறு பாடுகின்றார்.

அமிழ்தில்மே லான ழகரத்தேன் சொட்டும்
தமிழ்ப்பற்றைத் தாயமுதோ டுண்டு-தமிழ் காத்தல்
பண்டையநாட் டொட்டெங்கள் பண்புதமி ழெங்களுயிர்
நண்டெழுத்து வேண்டாம் நமக்கு

இவ்வாறான கவிதையில் இவரின் மொழிப்பற்று இனப்பற்று என்பவற்றோடு அன்று தமிழர் மத்தியில் தோற்றம்

பெறத் தொடங்கிய "தமிழ்த்தேசிய உணர்வும்" வெளிப்படுகிறது.

ஒரு கவிஞரின் நம்பிக்கை உறுதி, செருக்கு என்பன கொண்டு தான் நினைத்ததை நினைத்தவாறே பாடும் இயல்பினன் ஆகும் போது சமூகக் குறைபாடுகளை துணிவோடு சாடுவான். அவ்வாறே இவரும்,

"வீட்டையழித் துன்னுரிமை விற்கவென்றே - பேடித்தமிழர்
பணப்பித்தந் தெளிந்திடவே....." என்றும்

நீச்சலுடை சிக் உடையில் அரை, கால், முக்கால் நிர்வாணக்
காட்சிகளைத் திரையில் காட்டி
போச்சுதெமர் பண்பையோ என்போர் கூற்றைப்
புறக்கணிக்கும் ஆறறிவு போதாக்காலம்"

என்றும் பாடுகிறார். கவிதைகளில் கவிஞரின் இவ்வாறான ஆதங்கம் வெளிப்பட்டுச் செல்வதைக் இத்தொகுதியிலே காணமுடியும்.

பெரியோரைப் போற்றுதல், சான்றோரைப் பாடுதல் அவர் தம் பெருமைகளை எடுத்தியம்புவனவாக இருக்கும் கவிதைகளில் இவர் கவிதை வரிகள் ஆற்றொழுக்காகப் பாய்கின்றன. அங்கு சான்றோரின் பெருமையோடு தமிழ்ப் பெருமையும் வெளித்தெரிகின்றன. இலங்கையர்கோனுக்கு மஹாகவிக்கு, மூதூர் ஏகாம்பரத்துக்கு , வன்னியசிங்கத்துக்கு, காசியானந் தனுக்கு, நாவலருக்கு என்று பாடிய வரிகளில் எம்மொழியின் பண்பையும் அவர்கள்மேற் கொண்ட பற்றையும் சேவைகளையும் பதிவு செய்து வைக்கிறார். பல அஞ்சலிகளிலும் வாழ்த்துக்களின் இப்ண்புகள் வெளிப்படுகின்றன.

வன்னியூர்க் கவிராயரின் கவிதைகள் ஏறத்தாழ 1954-1974 வரையில் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (சுதந்திரன் கலைச்செல்வி, ஈழநாடு). இவற்றிலே கால இடைவெளியைத் தெளிவாகக் காணலாம். இவர் தான் வாழ்ந்த ஊரையோ,

மண்ணையோ சிலாகித்து அவற்றின் வாழ்க்கைப் பண்புளைப் பாட விளையாத போதும் பொதுவாக சாதி, மத பேதங்கள், கலாசார சீரழிவுகள் என்பவற்றைத் தொட்டுச் செல்கிறார். ஆங்காங்கு கந்தன் பெருமை பாடுகிறார். பல கவிதைகளில் சைவசமய புராணக் கருத்துக்கள், தகவல்கள் விரவிக் காணப்படுகின்றன.

ஞானக்கண்ணால் விழுதீப் பொறிகளாறும்
நானிலத்தைப் பொசுக்குமென வுமையாளஞ்சி
தானத்தீப் பொறிகடமை யுதரத்தேற்றுத்
தற்காத்துக் குளிராக்கிச் சின்னாளின் பின்.....

நல்ல கவிதைகள் வாசகனை "தன்னை இன்னொரு நிலையில் வைத்து பார்ப்பதற்கு உதவும். இது அவர்களுக்கு கற்பனைத் திறனை ஊக்குவிக்கின்றது" என பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுவார். இத்தகைய பண்பைக் கவிராயரின் கவிதைகளில் காணலாம். மேலும் காலத்தின் பதிவாகி பின்வரும் காலத்தினர்க்கு குறிப்பிட்ட காலச் சம்பவங்களை செய்தியாகவும் அகப்படிம நிலையிலும் உய்த்துணரச் செய்யும் ஆற்றலும் கவிதைகளுக்கு உண்டு. இவ்வாறு கவிஞரின் அப்போதைய ஈழத்து அரசியல் சூழ்நிலையை அவரது தமிழ் அரசியல் பிரச்சினை சார்ந்த கவிதைகளிலே காணமுடியும். மேலும் இவரது கவிதைகளில் எள்ளல், நகைச்சுவை, கண்டனம் என்பனவும் வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்.

இத்தொகுப்பிலே இடம்பெறும் கவிதைகளின் வித்துவம் வியந்து போற்றத்தக்கது. அதுவும் ஆயிரத்திலே ஒரு கவிஞருக்குக் கை வரும். நாகபந்தம், ஆறாரச்சக்கரம் என்பன இவரின் உயர்புலமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவரின் சக்தி இரட்டை நாகபந்தத்தை வெளியிட்ட சுதந்திரன் ஆசிரியரே அதனை வியந்து எழுதியுள்ளமை இங்கு ஈண்டு குறிப்பிடத் தக்கது.

வன்னியூர்க் கவிராயர் ஒரு பேனாப் போராளியாகவே இருந்திருக்கிறார். "பண்டார வன்னியன் போல் தாய் நாட்டுக்காக வாழு" என்ற கவிதையிலே அவர் போர்க்குணம் வெளிப்படுகிறது. அதனை

"வற்றாத வளம்மிக்க வன்னி நாட்டில்
வாட்சிங்கம் பொறித்தகொடி வானளாவி
நற்கம்பத் திற்பறக்க அடங்காப்பற்றை
நல்லரசு புரிந்திட்ட இறுதி மன்னன்" என்ற கவிவரிகள்

மூலம் காணலாம். அடங்காத்தமிழ்ப் பற்றும், தமிழர் சுயாட்சி உணர்வும் இவரது கவிதைகளில் வெளிப்படும் நேரம், ஆங்காங்கு அகிம்சை, உணர்வும், சாதி, மத, பேதம் கடந்த சிந்தனையும் வெளிப்பட்டு நிற்பதைத் தெளிவாகக் காணலாம்.

வன்னியூர்க் கவிராயர் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் பதிவு செய்யப்பட வேண்டியவர். ஏற்கனவே ஆர்வலர்கள் பலரால் அவரது படைப்புக்கள் அவர் பற்றிய விபரங்கள் வெளிக்கொணரப்பட்ட போதும் அவை முழுமையாக அல்லது குறிப்பிடக்கூடியளவேனும் வெளிக்கொணரப்படவில்லையென்றே சொல்லலாம். இம்முயற்சியின் தொடர்ச்சியாக திருமதி.நெலோமி அன்ரனி குரூஸ் அவர்கள் ஏற்கனவே கிடைக்கப்பெற்ற கவிதைகளுடன் தன்னால் தேடியறியப்பட்ட கவிதைகளையும், கொண்ட இக்கவிதைத் தொகுப்பை ஈழத்தமிழ் இலக்கிய உலகிற்குப் படையல் செய்துள்ளார். இதற்காக அவர் பட்டபாட்டை நானறிவேன். அவரது முயற்சி மேலும் தொடந்து கொண்டேயிருக்கிறது. எதிர்காலத்தில் வன்னியூர்க் கவிராயரின் படைப்புக்களை ஈழ மண்ணுக்கு ஆகக் கூடியளவு முழுமையாக வழங்குவார் என்று நம்பிக்கை கொள்கின்றேன்.

மறைந்து கிடக்கும் நம்பொக்கிஷங்களை மறையாதும் மீட்டுருச் செய்தும் தரும் பணி என்றும் போற்றுதற்குரியது.

பொ.சத்தியநாதன்
விரிவுரையாளர், இணைப்பாளர்,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## என்னுரை

வெண்கலச் செட்டிகுளப் பிரதேசம் வவுனியா நேரியகுளம் வேப்பங்குளம் கிராமத்தில் பிறந்து, வளர்ந்து. வாழ்ந்து 37 ஆண்டுகளுக்கு முன் மறைந்தவர் வன்னியூர்க் கவிராயர்.தான் வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுத்தவர். வெளித்தொடர்புகள் குறைவான குக்கிராமத்தில் இருந்து கொண்டு இயலுமட்டும் இலக்கியப் பணியாற்றியவர். அண்மைக்கால இடப்பெயர்வு வரை உலகம் தெரியாத அப்பாவி மக்களிடையே இலக்கியத் துணையின்றி தனித்துக் கிடந்த மாணிக்கமாகவே என் நினைவுகளில் அவர் பதிவாகின்றார்.

என் கண்களால் அவரைக் கண்ட நினைவு இல்லை. ஏனென்றால் எனது ஐந்தாவது வயதில் வேப்பங்குளம் கிராமத்திலிருந்து வெளியேறி எமது வாழ்க்கை யாழ்நகரத்தோடு ஒன்றித்துப் போனது. எனது தகப்பன் கவிராயரைப்பற்றி அதிகம் சொல்லக் கேட்டிருக்கிறேன். எமக்கு அக்கிராமங்களுடனான தொடர்பு 1994 இல் இலுப்பைக்குளத்தின் மணமகளாக திரு.அன்ரனி குருஸை மணம் முடித்த போது மீண்டும் ஏற்பட்டது.

நாமிருவரும் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது கவிராயரின் திறமை, புலமை பற்றி அன்ரனிகுருஸ் கூறுவார். தனக்கு முன்னர் இரு சகோதரர்கள் பிறந்து இறந்த பின் மூன்றாவதாக தான் தாயின் வயிற்றில் கருவாக இருந்த போது கவிராயர் அக்கருவின் நலனுக்காக அந்தோனியார் பெயரில் பதிகம் பாடியதாகவும், அவரின் பாடல் தன்னை வாழ்வித்திருப்பதாகவும் கூறினார்.1983 இல் சிறுமியாக இலுப்பைக்குளம் சென்ற போது இருபது தாள் கொப்பியில் எழுதப்பட்ட மை கலைந்து கொண்டிருந்த அந்தச் செய்யுட்களை நான் பார்த்தேன். படித்தேன், 1985 இல் கிராமத்தவர்கள் இடம்பெயர்ந்து மடுவுக்குச் சென்ற போது அந்தக்கவிதை உட்பட கவிராயரின் அரும்பெரும் சேமிப்பான வைத்தியச் சுவடிகளும்,

அவரது படைப்புகளும் கைவிடப்பட்டு அழிந்து காணாமலேயே போய்விட்டன.

எமது தந்தை கொடுத்த தகவலின்படி யாழ்நகர் உடுவிலில் வாழ்ந்த கவிஞரின் மருமகன் முறையானவரும், தமிழ் ஆர்வலருமான திரு.சண்முகநாதன் என்பவரிடம் கவிராயர் வெளியிட விரும்பியிருந்த 'அமுதகங்கை' எனும் நூலுக்கான கவிதைத் தொகுப்பும் 'தூண்டுகோல்'எனும் கட்டுரைத் தொகுதிக்கான கட்டுரைகளின் தொகுப்பும் இருப்பதையும் அவற்றை வெளியிடுவதற்காக கவிராயர் அவரிடம் கொடுத்திருந்தார் என்பதையும் அறிந்து நாமிருவரும் அவரிடம் சென்றிருந்தோம். அவர் அதை எம்மிடம் தருவதாகக் கூறினார்...ஆனால் தரவில்லை..இளம் பிள்ளைகளான எம்மிடம் அதைக் கொடுக்க அவர் தயங்கியிருக்கலாம். பல்கலைக்கழகப் படிப்பு முடிந்த அதே காலகட்டத்தில் 1995இல் யாழ்நகர் இடப்பெயர்வும் ஏற்பட்டது. கவிதைகளைப் பெறும் வாய்ப்பும் தூரமாகிப் போனது. பின்னர் திரு சண்முகநாதன் அவர்கள் காலமாகிவிட்டார் என்பதையும் அறிந்தோம். அவர் குடும்பத்தினர் மீளவும் குடியேறி விட்டனர் என்பதை அறிந்து அங்கு சென்று அவர் மனைவியிடம் விசாரித்த போது எமக்குக் கிடைத்த பதில்...'அது எங்கேயென்று தெரியாது...'

கவிராயரின் மகன் பாரதியிடம் அவரின் ஏட்டுச்சுவடிகளில் சில இருப்பதை அறிந்தோம்..அவர் மத்திய கிழக்கு நாட்டிற்குச் சென்று திரும்பி வந்த போது விடாப்பிடியாக மீண்டும் கேட்டோம்..தரச் சம்மதித்தார்...ஆனால் பயன் தான் கிடைக்கவில்லை...எமக்குக் கிடைத்தவை சுவடித் துகள் மட்டுமே...எலி தின்ற அந்த மிச்சங்களை எழுத்துக் கூட்டிப்படித்தேன்..அவை மருத்துவக் குறிப்புகள்...ஒரு பழைய அகராதியும் அவற்றுடன் கூட இருந்தது.. எமக்கு எஞ்சியது கண்களில் நீர்த்துளி மட்டுமே கவிராயர் என்ற மாணிக்கத்தை மண்ணில் தொலைத்து விட்டதில் நாம் எல்லோரும் பொறுப்பாளிகள் தான் என்று உறுத்திக் கொண்டே இருக்கும்...ஏதாவது செய்ய

வேண்டும், செய்யவேண்டும் என்று அடிமனது கூக்குரல் இட்டுக் கொண்டே இருக்கும்.

கவிராயரின் படைப்புகளைத் தேடித் தொகுக்க வேண்டும் அப்போது தான் அவரை முழுமையாகத் தரிசிக்கலாம் என்றும் பல கருத்துகள் வெளிவரும் போதெல்லாம்..அந்த வேலையை நாம் தான் செய்ய வேண்டும் என மனது அடித்துக் கொள்ளும். ஆனால் வாழ்க்கைச் சுழிக்குள் அகப்பட்டுக் கொண்ட எம்மால் அதனைச் செய்து முடிக்கும் சந்தர்ப்பம் தள்ளிக் கொண்டே போனது.

எந்த வேலையையும் தொடங்கி முடிக்க பலமான ஒரு தூண்டுதல் இருந்தால் காரியம் தானாக நடக்கும் என்பதற்கு இந்த தொகுப்பு நல்ல உதாரணம். கவிராயர் கலையிலக்கியப் பேரவை கவிராயருக்கு சிலையொன்றை நிறுவ வேண்டும் என்று தொடங்கிய முயற்சியில் கவிராயரின் ஆக்கங்களையும் தேடி எடுத்து வெளியிட்டு அவருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணமும் பெருவிருப்பாக பரிமாணம் எடுத்தது.

இதையடுத்து கொழும்பு சுவடிகள் காப்பகத்திற்கு எமது பயணம் தொடங்கியது. காலை முதல் மாலை வரை பழைய பத்திரிகைக் கட்டுக்குள் ஓயாது கவிராயரைத் தேடினோம். ஒருநாளில் கிட்டத்தட்ட 12 வருடப் பத்திரிகைகளைப் பார்த்து முடிக்கக் கூடியதாக இருந்தது. ஓரங்கள் உதிர்ந்து சொரிகின்ற 60 வருடப் பழமையான பத்திரிகைகளை நொந்து போகாமல் பிரித்துப் பார்ப்பதென்பது பொறுமையைச் சோதித்தது. ஒவ்வொரு பத்திரிகையிலும் 1953-1978 வரையான 25 வருடகாலப் பத்திரிகைகளைப் பார்க்கவேண்டி இருந்தது. அவர் படைப்புகளைப் பத்திரிகைகளில் காணும்போது மனம் துள்ளிக் குதித்தது.

கிட்டத்தட்ட பத்திரிகைகளிலிருந்து 35 கவிதைகளையும் கலைச்செல்வி ஈழநாடு சஞ்சிகைகளிலிருந்து தலா ஒரு கவிதை வீதம் பெறமுடிந்தது. ஏனையவை உறவினர்களிடமிருந்து

பெறப்பட்டுள்ளன. இவற்றில் 8 வெண்பாக்கள் உள்ளிட்ட இருபது கவிதைகள் ஏற்கனவே கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களால் தேடப்பட்டு ஈழத்துக் காவிய தீபகத்தின் மீள்பிரசுரம் 'அமுத கங்கை' என்ற பெயரில் மாருதம் வெளியீடாக வெளிவந்த போது அந்நூலில் கவிதைகள் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவிஞர் கலியுகன் அவர்களின் குடும்பத்தினரால் கவிராயரின் கவிதைகள் என்று குறிப்பிடப்பட்டு இரண்டு சிறுவர் பாடல்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் அக்கவிதைகளில் கவிஞரின் பெயர் உறுதிப்படுத்தப்படாமல் உள்ளதால் இத்தொகுப்பில் இடம் பெறவில்லை

கவிராயரின் விசேட திறமையான சித்திரக்கவி எனப்படும் நாகபந்தம், சக்கரபந்தம், தேர்ப்பந்தம், நீரோட்டம் போன்ற கவிதை வடிவங்களில் நாகபந்தம், சக்கர பந்தம் ஆகியவற்றை மட்டுமே காணக்கிடைத்தது. அவற்றுடன் ஈழத்துக் காவிய தீபகத்தில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள இரு கவிதைகளுடன் மேலதிகமாக தேடி எடுக்கப்பட்ட இரு நாகபந்தங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இவைதவிர அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணக்கிடக்கும் நினைவு மலர்கள், திருமணவாழ்த்துப்பாக்களின் பகுதிகளும் இக்கவிதைத் தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

எம்முடைய ஆதங்கம் முழுவதையும் இங்கு கொட்டி எழுத முடியவில்லை. அதனை எழுத வார்த்தைகளும் இல்லை... யார் யாரிடமெல்லாம் அவரின் குறிப்புகள் இருக்கின்றனவோ... யாருக்கெல்லாம் வாழ்த்துக்களைப் பாடினாரோ...அவரின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், இறப்புகளும் அவர் ஆக்கங்களையும் சேர்த்துத் தொலைத்து விட்டதே என்பதை எண்ண எண்ண உள்ளம் ஆறவில்லை..

மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு செட்டிகுளத்தில் தனது முதற்

திருப்பலியை ஒப்புக் கொடுத்த போது அவருக்கு வாழ்த்துப் பா பாடியதாக அறிந்தோம். அதனைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை, இன்னும் வானொலிக் கவியரங்குகளில் அவர் பங்குபற்றியுள்ளார் என்ற குறிப்புகளின் அடிப்படையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சென்றோம்..ஆனால் பழைய ஒலிப்பதிவுகள் அழிக்கப்பட்டமையால் அங்கிருந்தும் அவற்றைப் பெறமுடியவில்லை, அவரோடு நெருக்கமாக இருந்த பல பிரபல எழுத்தாளர்கள் பலர் தமது பணி முடித்துக் காலமாகியிருந்தனர். இருப்பவர்களை முதுமையும் இயலாமையும் ஆட்கொண்டுள்ளன.

அவர் மறைந்த பின்னர் 16 ஆண்டுகள் வரையிலும் அவரது படைப்புகள் அவர் மருமகனிடம் இருந்துள்ளன. அவை இல்லாமல் போய்விடும் என்று தெரிந்திருநந்தால் திருடிக் கொண்டு வரும் செயலையாவது செய்திருக்லாம் என்ற ஆதங்கம் இப்போது தோன்றுகின்றது.


முடிந்ததைப்பற்றிப் பிரலாபித்து இனி ஆகப்போவது ஒன்றுமில்லை. எங்கேயாவது இலக்கிய உள்ளங்களிடம் அவர் தொடர்பான ஆக்கங்கள் இருந்தால் அவர்கள் அதனைத் தந்து உதவலாம். இன்றைய காலத்தில் அவர் எழுதிய ஒவ்வொரு வரிதானும் எமக்குப் பெறுமதியானவைதான். அதனால் தான் திருமண வாழ்த்தையும், நினைவுக் கல்வெட்டுக் கவிதையையும் கூட அவர் கவித்திறனுக்காகத் தேடிக் கொண்டு இருக்கின்றோம்.

இக்கவிதைகளைப் பெறுவதற்கு பலரும் உதவியுள்ளனர். உறவினர்களிடமிருந்து கவிதைகளைப் பெற உதவிய திரு.தயாளன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி நூலகர் செல்வி நீ.நாகலிங்கம், கலைச்செல்வியில் தேட உதவிய திரு.சரவணபவன், திரு.சவுந்தரம், தேசிய சுவடிகள் காப்பகத்தினர் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்னும் நானே தானாக நின்று செயற்பட்ட எனது துணைவர் திரு அன்ரனிகுரூஸ் அவர்களும் எனது விசேட நன்றிக்களுக்கு

உரியவராகின்றார்.இன்னும் வன்னியூர்க் கவிராயர் கலையிலக்கியப் பேரவையின் முதலாவது விழாவான கவிராயரின் உருவச்சிலை திறப்பு விழாவில் அவர் தொடர்பான கவிதை, சிறுகதை, ஊர்வரலாறு போன்ற நூல்களையும் முதல் வெளியீடாக வெளியிட்டு இந்நூலுக்குச் சிறப்புச் செய்த கவிராயர் கலையிலக்கியப் பேரவையினருக்கும் என் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.நெலோமி அன்ரனிகுரூஸ்
விரிவுரையாளர்,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

## நாகபந்தம்





மாகதிரை மன்னவா வாருமகத் தே, தேவா
ஆகமன நூலாநின் பாலலதி - மோகமதே
மூழ்அன்ப ரைப்பேணா யென்னின்பே கந்தா வா
வாழ்வினல மேவாழ வே!

ககனமகிழ் நாதா கலியுகனே காராய்
அகவுமயி லா, வாழ் வருணீ - இகத்தெந்தன்
துன்ப மகற்றிஇரு மைவெற்றி தேவா தா
இன்பமத னை வான வா!

## ஆறாரச் சக்கரம்


### கல்வி ராணியே!



கற்றோரார்க ளேற்றிடுங் கலாராணி வீரம், நிதி, கல்வி தா!
நற்றா மரைக்கன்னீ பில்லாணி யாம்பல் நகைதுலங்க
பற்றோடு தோன்றிநீ யேநவி லாயே பரிந்து திடத்தினையே
கற்றாளே நல்கிப் படிமிசைதா னெனக்கருமை ஆயேசக்தீ!

# நல்லைமுருகன் நாகபந்தம்

-வன்னியூர்க் கவிராயர்-




ஈழவட நல்லைஊ ரோங்கு முருகாவா
வேழமுகத் தோனிளைய வாவேலா - வாழவழி
காட்டுமிடி யோடநித்தி யம்நீசத் தீசேயே
ஊட்டகத்தி லேநீ ஒளி

அழகாடு நீடுநல்லை வேலா இருமை
பலனையிரந் தேனிட்ட பங்கா - நலமேவு
சேவல் கொடியோடு செங்கரவே லாலிங்கு
காவல்செய் வந்தெனைநீ கார்.

## நாகபந்தம்

நாகபந்தக் கவிதை யாக்கும் சக்தி ஆயிரத்திலொரு கவிஞருக்குத்தான் அமையும். ஒரு பாம்புக்கு (59 எழுத்துக்களில்) ஒரு வெண்பாவாக இரண்டு பாம்புகளுக்கும் இரண்டு வெண்பாக்கள். தலையில் தொடங்கி வால் ஈறாக வகுக்கப்பட்டுள்ளதுதான் நாகபந்தம் என்று அழைக்கப்படும். இத்தகைய சக்தி கைவரப்பெற்றவர் நமது ஈழத் தமிழ் நாட்டுக்கவிஞர்களில் ஒருவரான "வன்னியூர்க் கவிராயர்". அவர் சக்தி மீது பாடிய இரட்டை நாகபந்தக் கவிதையை இவ்வாரம் பிரசுரிப்பதில் சுதந்திரன் மகிழ்ச்சியடைகிறது.

ஆசிரியர் - *10.10.1971*




## சக்தி இரட்டை நாகபந்தம்

பாராள் சிறந்ததமிழ் பண்பாடு மீழமண்ணில்
ஊரா ளுயர்கண் மொழியாக - தேரே
கலையரசி மெய்யா யுதவிசெய்தா யேபூ
தலமதில்மே லேவாழவே!

சீரார் நிதி, கல்வி, தேகவீ ரந்தா நீ
பேராரதீத இராணி மகிழ்தா - நேராக
தாயேவித் தையது நின்னாளுகையிற் தானாக
நேயவித யந்தனில் வாழ் நீ

## வாழ்த்துக்கள்

வாழ்வாங்கு நாம் வாழ வழிவகுக்கும் நற்பணியில்
ஏழாண் டுழைத்த வெமதிதழே — நீள்புவியில்
பல்லாண்டு வாழ்ந்தெமக்குப் பலபயன்கள் தந்திடுவை
நல்லாசி சொன்னேன் நயந்து

சாதிமதச் சூழ்ச்சிகளைத் தமிழ் மரபி னின்றகற்றி
நீதி நெறி யன்பை நிலைநிறுத்தி — ஆதித்
தமிழரசைத் தோற்றுவித்து தாய்மொழியை மேம்படுத்தி
மகிழ நடப் போமுன் வழி

வெற்றி நம தேயெனநாம் வீறுகொண்டு போர்புரிவோம்
சிற்றிளைஞ ரொன்றாய்த் திரண்டெழுமின் - சற்றுமினித்
தாமதியீ ரென்றழைக்குந் தமிழ்ப்போர் முரசொலியே
வாமமிகும் வாள் முனையே வாழ்க

வாசித் தறிவுறவி வாதித்து ளந்தெளியப்
பேசியெழு திப்பெருமை பெற்றிடவே - ஆசையுறும்
எல்லோர்க்கும் வாய்ப்பருளும் எங்கள் 'சுதந்திரனே'
நல்வாழ்த்து விண்டேன் நயந்து

*13.06.1954* சுதந்திரன்

## பொங்கல் வாழ்க!

கல்வி,நுண் ணறிவு பொங்க!
        கலை, கலா சாரம் பொங்க!
செல்வமோ டாற்றல் பொங்க!
        தேகநற் சுகமும் பொங்க!
நல்லசெந் தமிழும் பொங்க!
        நம்மின நட்பும் பொங்க!
வல்லபன் கிருபை பொங்க!
        வாழ்குக, பொங்கல் நாளே!

*!3.01.1956* (நண்பர் சண்முகநாதனுக்கு அனுப்பியது)

## நண்டெழுத்து வேண்டாம் நமக்கு

அழிழ்தில்மே லான ழகரத்தேன் சொட்டும்
தழிழ்ப்பற்றைத் தாயமுதோ டுண்டு – தமிழ்காத்தல்
பண்டையநாட் தொட்டெங்கள் பண்புதமி ழெங்களுயிர்
நண்டெழுத்து வேண்டாம் நமக்கு.

*10.05.1958* சுதந்திரன்

## கன்னத்தை என்பக்கம் காட்டு

மடடுநகர்ச் சம்பா மணிபோல வன்னியூர்க்
கட்டித்தேன் பேச்சிற் கலந்தீழக் - கெட்டிமுத்தைப்
புன்னகைத்துச் சிந்துமிளம் பூங்கொடியே அம்பலவிக்
கன்னத்தை என்பக்கம் காட்டு

*10.05.1959* சுதந்திரன்

## நானிலத்தை வாழ்விக்கும் நாள்

பிறர்குற்றம் கண்டுதன்னைப் பேணித் திருத்தி
அறமன்பை ஆயுதமாய்க் கொண்டு — குறள்நெறியில்
மானிடர்க ளோர்குலமாய் மாண்புடனே வாழுமந்நாள்
நானிலத்தை வாழ்விக்கும் நாள்

*24.05.1959* சுதந்திரன்

## குட்டுண்ட டொன்பிலிப்பே கூறு

எம்மீப்பி எங்கே? எமது தமிழிகமும்
சிம்மக் குரலெங்கே? திட்டமெங்கே? — உம்பதவி
தட்டுண்ட தேனோ தலைமைக் கிறுக்கதனால்
குட்டுண்ட டொன்பிலிப்பே கூறு

இணைப்பாட்சி யிற்தான் இலங்கை செழிக்கும்
எனுமுணர் வில் லார்பதவிப்பித்தர் - எனைப்போற் கால்
வெட்டுண்ட மாடாய் விழுவரெதிர் காலம்என்று
குட்டுண்ட டொன்பிலிப்பே கூறு

*05.07.1959* சுதந்திரன்

## ஏன்இந்த வெட்கம் இனி

அத்தர், பவுடர்ஸ்னோ, ஜடக்ஸ், நெயில்பொலிஷ்கை
சுற்றும்பேக், லிப்ஸ்டிக், பிறேசியரால் - அற்புதநை
லோன்சாரி மேக்கப்பால் உள்ளம் கெடுத்தபின்னர்
ஏன்இந்த வெட்கம் இனி

*16.08.1959* சுதந்திரன்

## ஏன் இந்த வெட்கம் இனி

உணர்ச்சியுயிர் உள்ளத் துறைந்தினிக்கு மன்பே
கணம் பிரியாக் கட்டிக் கரும்பே – நினதாவி
யான்நீ யெனதுயிர்ஏ காந்தத் திருக்கையிலும்
ஏன்இந்த வெட்கம் இனி

*23.08.1959* சுதந்திரன்

## சிரித்தாளே அந்தச்சிலை

சாதிமத பேதம் தகர்த்து முழுமனதாய்க்
காதலித்த வென்னையே கைப்பிடித்து – நீதி
நிறுத்துமுங்கள் வீரம் நிகரற்ற தென்று
சிரித்தாளே அந்தச் சிலை

*22.11.1959* சுதந்திரன்

## ஆடி இருபதிலே சாடு

ஆட்டினத்தைக் காக்க அவாவுறும் ஓ நாயாய்உன்
வீட்டையழித் துன்னுரிமை விற்கவென்றே – போட்டியிடும்
பேடித் தமிழர்பணப் பித்தந் தெளிந்திடவே
ஆடி இருபதிலே சாடு

*26.06.1960* சுதந்திரன்

## நீடு வாழ்க

மங்களஞ்சேர் நுமதுதிருத் தாய்நாடான
வளரீழத் தமிழ்பேசு மினத்தோரன்பு
சங்கை, பண்பு, அறிவு, தொழில் வளர்ச்சிபெற்று
தலைநிமிர்ந்து உயர்வாக வேண்டுமென்ற
பொங்கிடும்நும் முள்ளத்து இலட்சியத்தை
பேனாவாற் கொட்டியுணர் வூட்டுமெம்மி
லங்கையர்கோ னெனுங்கலைஞ! நின்னை யாங்கள்,
நானிலத்தி லினியொருநா ளெங்குகாண்போம்?

"கல்லாமை, அறியாமை, பொறாமை, சோம்பல்,
கள், சூது, பணவாஞ்சை, பதவிமோகம்
நல்மரத்திற் புல்லுருவி பாய்ந்ததொப்ப
நம்முயர்ந்த தமிழினத்தை யழிப்பதுண்மை,
அல்லல்தரு மிக்கொடிய பிணிகடம்மை
அருணனெதிர் பனியாக்க வேண்டும்" என்று
அல்பகலாய்ப் பேனாவால் மருந்துதந்த
அருங்கலைஞ! நும்மையினி யாங்குகாண்போம்?

ஒற்றுமைகட் டுப்பாடு விடாமுயற்சி
ஊக்கமுண்மை உழைப்பகிம்சை தியாகவுள்ளம்
பெற்றவராய்த் தமிழ்மக்கள் பிளவுநீங்கிப்
பிருதுவியிற் சுதந்திரமாய் வாழ்வதற்கு
கற்றகல்வி யறிவு அநு பவங்கடம்மை
கலைத்துறையிற் செலவிட்டு மனம்வளர்த்த
நற்குணமார் இலங்கையர்கோ னேநும்மையாம்
நானிலத்தி லினியொருநாட் காண்பதெப்போ?

“நாளாந்தம் சோம்பலின்றிக் கற்றாராய்ந்து
நன்முறையி லோயாம லெழுதிவந்தால்
ஈழத்தின் சிறந்தவெழுத் தாளராக
எவருமே யாகிடலாம்” என்னுங்கூற்றை
ஆழமதா யுமதுசெயல் மூலமாக
ஆரம்ப வெழுத்தாளர்க் குணர்த்திச் சென்றீர்
ஈழத்தி னெழுத்தாளர்க் கொளிவிளக்கே
இலங்கையர்க்கோ னேயும்மை என்றுகாண்போம்?

வானொலியில் அடிக்கடி நா டகங் களென்றும்
வாரவிதழ் மாதவிதழ் மலர்கடன்னில்
தேனொழுகும் சிறுகதைகட் டுரைகளென்றும்
தீந்தமிழை வளர்த்தீழ நாட்டினுக்குத்
தானழியாப் புகழீட்டித் தந்த தீரா
தமிழ்வாழு மட்டுமுயிர் வாழும்பேனாக்
கோனே நின் புனிதாத்மா சாந்திகொள்க
குவலயத்தில் நுமதுபுகழ் நீடு வாழ்க!

*1961* கார்த்திகை-மார்கழி,
கலைச்செல்வி

## அறிவினைத் தேடு தம்பி

புல்லைத் தின்று கன்றுக்குப்
புதுப்பா லூட்டும் பசுவைப்போல்
அல்ல லுறினும் கல்விகற்று
அடுத்தோர் வாழ்வை யாராய்ந்து
வெல்லச் சுவையார் சொற்செயலால்
விரக்தி துன்பம் பசிபோக்கி
நல்ல சுபீட்சம் எதிர்காலம்
நாட்ட லுன்றன் கடமையதாம்!

பண்புள்ள பழமை காக்க,நல்ல
பயனுள்ள புதுமை பூக்க
எண்ணஞ் சொற் செயலாலுன்றன்
எதிர்காலத் துழைப்பதற்கு
கண்ணியம் கட்டுப் பாடு
கடமையில் வழுவி டாமல்
அன்னம்போல் நல்ல கற்று
அறிவினைத் தேடு தம்பி!

*24.06.1962* சுதந்திரன்

# குயில்

கூவுகுது குயில் கூவுகுது – குக்கூக்
குக்குக் கூக் கூவெனக் கூவுகுது
காவிற் குந்திக் கருமேகமென்ன – செந்தேன்
கான மழை கொட்டிக் கூவுகுது!

பொன்னாடை போர்த்திடவும் வேண்டாம் - ஏதும்
பொற்கிழி, யீந்திட வும் வேண்டாம்
என்ன நிதியும் தரவேண்டாம் - இனா
மாயிசைக் கச்சேரி செய்கிறது!

காக்கையைப் போன்ற கருநிறமாய் - எழில்
காட்டாச் சின்னஞ்சிறு தோற்றமுமாய்
யாக்கை யுடையது வென்றாலும் இசை
ஞானத்திற் தேர்ந்து விளங்கிறது!

தோற்றத்தி னால் மட்டும் மானிடரின் – தன்மை
சோதிக்க வொண்ணாது என்பதற்கு
ஏற்ற விளக்கம் தரும் வகையில் - பூவில்
ஈசன் குயிலைப் படைத்தானோ!

22.07.1962 சுதந்திரன்

## புத்தாண்டே வருக

மங்களப்புத் தாண்டே வருக! உந்த நின் வரவு
நல்வரவ யாகுக! வா! நல்வருட மாயிரத்துத்
தொள்ளா யிரத்தறுபத் துமூன்றே - எல்லோரும்
வாழ் வாங்கு வாழ வழி வகுத்து மாந்தர்களின்
வாழ்வைச் சீராக்கியே வாழியநீ - நீள்புவியில்
வல்லரசுக் கள்தமது மண்ணாசை போக்கி யுத்தத்
தொல்லை தொலைத்துநட்பைத் தோன்ற வைத்தே - நல்லுரிமை
சீராய் வளர்த்துச் சிறந்தஜன நாயகத்தை
நேராய் புவியில் நிலை நிறுத்து - சாந்தி கொன்று
ஆட்சிதனைப் பற்றும் அதிகாரக் கும்பலின் கீழ்
மீட்சியின்றி யென்று மடிமைகளாய் - இட்டம்
இருந்தாலும் இல்லாது போனாலும் ஆள்வோர்
ஒரு சொற் பணித்திடுகி லீசன் - திருவாக்காய்க்
கொண்டு தலைவனையே கும்பிட் டவன் போற்றும்
மண்டுகளை நல்லோர் எனப்போற்றிக் - கொண்டாடி
அன்னோர் இகழ்வேரை யாமும் இகழ்ந்துரைத்து
சொன்னபடி யாரும் சொரணையற்ற - இன்னல் நிலை
வாக்குரிமை பேச்செழுத்து மற்றும் உரிமையின்றி
ஏக்கமுடன் வாடும் இழிந்த நிலை - பூக்காமல்
ஆசியதே சியத்தை மக்கள் ஆருயிராய்க் காப்பதற்கு
தேசிய பக்தியெழச் சேவைபுரி - காசினியில்
தொல்புகழ்சேர் நாடு சுடர்முத்தை வேழத்தை
நெல்மணியை யன்று பிற நாடுகட்கு நல்முறையில்
வாணிபஞ்செய் நாடு வளமார் விவசாயம்
பேணி வளர்த்த பெருநாடு -வல்லமைசேர்
ஏர்த் தொழில்மே லோங்க மற்று மெத்தொழிலுமே சிறக்க
நேர்மை,உண்மை,நீதிநிலைத் தேயோங்க செந்தமிழிங்(கு)
ஆட்சிமொழி யாகி அரியணைமீ தேவாழ
மாட்சிமையாய் நம் நாட்டுக் கேற்றவொரு - ஆட்சிமுறை

இட்டமாய்ப் பூத்த∴து என்றும் நிலைத்து நிற்க,
சட்டத்தில் எம்முரிமை சந்ததமும் - திட்டமுடன்
வாழ்ந்திடவும், நாடற்ற மக்களாக் கப்பட்டே
தாழ்ந்துரிமை யின்றியே வாடுபவர் வீழ்ந்த
உரிமை யனைத் தும்மீட் டுயர் வாழ்வு வாழ
உரிமை யுணர் வுள்ளோர்க்கு ஊட்டு – அன்பு நிறை
தன்மான வீரர் தலைவர்தமிழ்த் தந்தை செல்வர்
நன்னயமார் கட்சிநல மாய்வளர - இந்நிலத்திற்
தொண்டாற்றி யெங்கும் சுபீட்சம் கொழிக்கச் செய்
மண்டலத்துன் னாட்சியிலே வாகாய்!

*30.12.1962* சுதந்திரன்

## வெற்றி நமதே

உன்மொழியைத் தானழித்து உன்பிரதே சம்பறித்து
உன்னினத்தை முற்றாய் ஒழித்திடவே – கன்னெஞ்சம்
சட்டமென்று போட்டசதித் திட்டமமு லாவதற்கு
விட்டாற்பின் நீயெங்கே வீள்!

தெற்கிலொரு பேச்சு, வடக்கில்வேறு சொற்பொழிவும்
நற்றமிழ்இங்க் லீஷ்சிங்க ளப்பேப்ப –ரிற்திரித்தும்
வெவ்வேறாய்ச் செய்திதந்த வீணர்களை நம்பிமண்ணை
கவ்வாமல் வாழவழி காண்

எல்லாப் பிரச்சினைக்கும் என்றும் எவர்கட்கும்
வல்லவர்க்கப் போராட்டத் திற்தீர்ப்புச் - சொல்வோரும்
ஏற்றிடுறார் சிங்களத்தை, ஏனா? இனப்பக்தி
சாற்றுன்னினப் பக்தி தவறா?

ஈர்மொழிகள் பேசும் இரண்டினங்கள் வாழுகின்ற
ஓர்நாட்டிற் துப்பாக்கி யாலுறுத்தி – ஓர்மொழியை
ஆட்சிமொழி யாக அமுலாக்க விட்டுவிட்டால்
வீட்சியுற்றுப் போகாயோ விள்?

அன்னைமொழி ஆட்சி அழியாத நம்மொழியை
என்னசெய்யுஞ் சிங்களமென் றேமாந்தால் - நின்சிறுவர்
சிங்களம்மட் டும்படிப்பார் செந்தமிழுக் கப்போது
இங்கெங்கே சொல்லு இடம்?

தேர்தல்களிலே தமிழர் தீர்ப்புக் கூறக்கூற
ஓர்மொழியிங் கொற்றுமையுண் டாக்கு மென்றால் - யார்நம்பி
வாளா விருந்தினத்தின் வாழ்வளிப்பர்? சிந்தித்து
வாழவழி தானமைத்து வாழ்!

‘வெல்வர்’வழி யாந்தமிழர் சீருடையா ரென்றுமட்டும்
சொல்வோ ருரிமைபெற வென்னவழி – சொல்லுகிறார்?
ஒன்றுமில்லை யன்னோர் உளறல்விடு, ‘செல்வர்’வழி
சென்றுரிமை காக்கவழி செய்!

ஈழத்துக் காந்திவழி இந்நாட்டி லெல்லோரும்
வாழச் சிறந்தவழி யவ்வழியில் - தோழவுடன்
சொந்த நலன்துறந்து தொண்டாற்று வெற்றிகிட்டி
செந்தமிழர் வாழ்வர் திடம்!

வெற்றிமீ தேதோழ வீண்ஜயம் விட்டொழித்துச்
சற்றுந் தயங்கா திணைப்பாட்சி – பெற்றிடவே
சொந்த நலன்துறந்து தொண்டாற்று வெற்றிகிட்டி
செந்தமிழர் வாழ்வர் திடம்.

எம்மை அழிக்க எழுந்தகொடுஞ் சட்டங்கள்
தம்மை எதிர்ப்போம், தரணிமுற்றும் - நம்மெதிர்ப்பை
கண்டிடட்டும் ஆராய்ந்து காலம் தகுந்தபதில்
விண்டிடட்டும் இங்குண்மை வெல்க!

*10.11.1963* சுதந்திரன்

## வருக புத்தாண்டே

ஒருதாயின் பிள்ளைகளாய் ஒற்றுமையாய் ஈழத்
திருநாட்டில் எல்லோரும் வாழ்ந்து - பெருமைபெற
இங்கோர் இணைப்பாட்சி ஏற்படுத்தற் காயுழைக்க
மங்களப்புத் தாண்டே வருக!

செந்தமிழர் எம்முரிமை சீவன்மே லாய்மதித்து
எந்தவிடுக் கண்களையு மேபொறுத்து - சொந்தப்
பிரதேசம் தாய்மொழியைப் பேணியே காக்க
உரமூட்டெம் மன்னோர்க்(கு) உளம்

கத்தியின்றி ரத்தமின்றி காலம் கனிந்தளித்த
சுத்த சுதந்திரத்தைப் சூழ்ச்சிநிறை - எத்தர்
மிரட்டல்களுக் கஞ்சிவீ ணாகாமற் காத்து
உரமூட்டெம் மன்னோர்க்(கு) உளம்

....................................................................................

....................................................................................

*05.01.1964* **சுதந்திரன்**

## மூதூர் முத்தே

எண்ணமெலாந் தமிழ்காக்கு மெண்ணமாக
இயம்புகின்ற பேச்சனைத்தும் தமிழைக்காக்கும்
திண்மைநிறை பேச்சாகச் செய்துகாட்டும்
செயல்யாவுந் தமிழ்காக்குஞ் செயல்களாக
கண்காக்கும் இமைமேலாய்த் தமிழைக்காக்க
கடைசிமூச் சேகுதமள வுழைத் தீரா
புண்ணியனே மூதூரின் முதல்வநின்னைப்
புகழாத நாளெல்லாம் பிறவாநாளே!

பற்றிவரும் பெருந்தீயைத் துளிநீராலும்
பாய்ந்துவரும் காட்டாற்றைப் பிடிமண்ணாலும்
முற்றாகத் தடுத்துவிட முடியுமென்றே
முழுநம்பிக் கைகொண்ட மூடர்கட்கு
"உற்றவுயிர் அணுவளவு, உரிமைத் தாகம்
உலகிலுயர் மலையளவு" உணரீர் என்று
முற்றுமுந்தன் செயல்மூல முணர்த்திக்காட்டும்
மூதூர்ஏ காம்பரரே போற்றிபோற்றி!

உலகமுள்ள வரைதமிழும் வாழ்தலொப்ப
உயர்ந்ததமி ழுளவரையில் உன்றன்நாமம்
சிலை எழுத்தாய் மலைவிளக்காய் திகழ்தல்திண்ணம்
செயல்வீர, உயர்தலைவ, தியாகச்செல்வ!
மலைபெயர்ந்தா லும்மனத்தின் உறுதிகுன்றா
மணிவிளக்கே மூதூரின் முத்தேஇம்மா

நிலமீது தமிழ்காத்து வளர்ப்பதற்கு
நிகரரிய திடமளிப்பை போற்றிபோற்றி!
"பளிங்குக்கல் பதித்திட்ட மாடிவீட்டில்
பஞ்சணையில் இருந்துறங்கி மின்காற்றாடி
சுழலவறு சுவையுணவு யுண்டுவாழ்வைத்
துய்ப்பதல்ல" உரிமைப்போர் தொடர்ந்துசெய்தல்
மொழியுரிமை, நிலவுரிமை காக்கும்பாதை
மோசமுள்ள கொடும்பாதை உயிரும்போகும்,
தளராது போராடின் இறுதிவெற்றி
சாஸ்தவந்தான் எனச்செயலில் சாற்றினீரே!

கல்லாலே சிலைவடித்து நிறுத்தியுன்னைக்
கௌரவித்தாற் காணாது. வருடமோர்கால்
சொல்லாலே எழுத்தாலே பொதுஅரங்கிற்
துதித்திட்டாற் போதாது, தமிழினத்தோர்
எல்லோரும் நெஞ்சத்தில் என்றுமுன்னை
இருத்தியறி வாற்றல்களுக் கேற்றவாறு
நல்லெண்ணம் செயல்களினாற் தமிழைக்காக்கும்
நற்பணியொன் றேநினது புகழைநாட்டும்!

22.03.1964 சுதந்திரன்

## பெருமை கொள்வோம்!

இருள் நீக்கி யொளிதேக்கி இரவைப் போக்கி
இனியபக லாக்கவரு மிரவியாக
அருள், அறிவு, அன்பு, பண்பு, கல்வி, கேள்வி
ஆற்றல்களிற் தலைசிறந்த ஆசானாக
உருள்புவியை ஊடுருவிப் பார்த்தே மானர்க்(கு)
'உயர் வாழ்க்கை நெறி' புகட்டு மோர்நன் நூலாம்
திருக்குறளை தீந்தமிழில் முந்தத்தந்தோன்
தேவர்-எங்கள் தமிழனென்றே பெருமை கொள்வோம்.

சிந்தையிலே யன்புசொல்லில் தேர்ந்த வுண்மை
செயல்களிலே அஞ்சாமை அகிம்சைகொண்டே
சொந்தநலன் பதவி புகழ் பணஞ்சேமிக்கச்
சுரண்டாது பிரதிபல னெதும்வேண்டாது
சொந்த மக்கள் துன்பநிலை நோக்கி நெஞ்சம்
நொருங்கியே சமத்துவத்தை நிலைநாட்டற்கு
பைந்தமிழிற் குறள் தருவள் ளுவனாரெங்கள்
பரம்பரைதா னெனநினைந்து பெருமைகொள்வோம்!

உழைப்பவரி லூதிபத்தை மூட்டைப்பூச்சி
    உருக்கொண்டு உறுஞ்சியுண்டு கொழுக்கும் வர்க்கம்
உழைப்பில்வரு மூதிபத்தை உலுத்தர்க்கீந்து
    உணவுடைக்கே திண்டாடி நிலைதள்ளாடி
களைத்திளைத்து யாசகராய் ஆகும்வர்க்கம்
    கண்டு எரி மலையாகக் கனன்று சாபம்
அளப்பரிய ஆண்டவனுக் கேயிட்டோன்நம்
    ஆற்றல்நிறை தமிழனென்றே பெருமைகொள்வோம்!

காலவெள்ளத் தாற்கரையா வைரம்பாய்ந்த
    கருத்துநிறை களஞ்சியமாஞ் சான்றோர்போற்றும்
ஞாலத்தின் மொழி, வண்ண, இன, மார்க்கங்கள்
    நாடுகளுர் வேற்றுமையாற் சிதைந்திடாநற்
கோலமுள தொன்றாமாஸ் திகர்- நாஸ்திகர்
    கொண்டாடும் பொதுமறையா மென்றும்வாழும்
சீலநிறை திருக்குறளைத் தந்தோனெங்கள்
    செழுந்தமிழ னெனநினைந்தே பெருமைகொள்வோம்!

*24.05.1964* ஈழநாடு

## மலையகத்தைப் பார்

பச்சைப்பட்டுப் போர்த்து நிற்கும்
மலைகள் பார்தம்பி – பளிங்கு
பாய்ந்துருகி யோடுகின்ற
நதிகள் பார்தம்பி
இச்சையுடன் இறைவன் வண்ண
ஓவியந்தீட்டும் - எழில்
இயற்கையன்னை புன்னகையை
இனிது பார் தம்பி!

வானளாவும் ரப்பர் மர
வடிவைப் பார்தம்பி - செழும்
மலர்க் கொடிகள் இளஞ்செடிகள்
வனப்பைப் பார்தம்பி
தேனமுதத் தேநீர்ப்பானம்
செய்தற் குதவும் - பொன் போற்
தேயிலையைத் தருஞ்செடிகள்
தேஜஸ் பார்தம்பி!

ஈழவள நாட்டின் முது
கெலும்பைப் போன்றது - செல்வம்
இந்த நாட்டிற் பெருகுதற்கோ
யாதுழைப்பது,
சோழ சேர பாண்டியர்கள்
மடி வளர்ந்திடும் - எங்கள்
தொன்மைத்தமிழ், வாழுகின்ற
மலையைப் பார்தம்பி!

வெண்பஞ்சுமா மலைகள் நிகர்
மேகங்களைப் பார் - யானை
வெருண்டுவரல் போற்கரிய
மேகங்களைப் பார்
தண்ணீர் வெள்ளிக் கம்பிகளாய்
தான் பொழிதல் பார் - பனிச்
சட்டையிடும் மலையணங்காள்
தன்மையினைப் பார்

கதிரவன் கீழ்த் திசையுதிக்கும்
காட்சியினைப் பார் - கவிஞன்
கற்பனையிற் தோற்றியொரு
அற்புதமான
அதிமதுரக் காவியமாய்
நிலை பெறுமுயர் - கோடி
அழகு கொட்டுங் காட்சியினை
ஆழ்ந்து நோக்கிப் பார்!

"ஆள்பவர்கள் சூழ்ச்சியினால்
அல்லலுற்றோரே - மலை
யகத்துறையுந் தமிழர்களே
ஒற்றுமையுற்று
வாழ்குகநீர் உரிமைமீட்டு
மலையகத்திலே" — என்று
மாங்குயில்கள் கானவெள்ளம்
வழங்குவதைப் பார்!

காடுகளைப் பண்படுத்தி
கழனிகளாக்க — சதா
காலை, மாலை, இரவு, பகல்,
கடும் வெயில், மழை
சூடுகுளிர் இன்ப துன்ப
மோர்சமனாக — எண்ணித்
தொடர்ந்துழைத்த தியாகிகளின்
தோன்றல்க ளின்று....

நாடு மொழி, குடியுரிமை
வாக்குரிமைகள் - இன்றி
நாதியற்றோ ராய்நலியும்
கொடுமைகள் தம்மை
ஏடுகொள்ளா வண்ணங்கோடி
கதைகள் கூறிடும் - தம்பி
இந்தமலை கேட்டுப்பார் அவர்
இழிநிலை தன்னை!

இயற்கையிலே பிறந்தமொழி
எங்கள் தாய்மொழி – கால
எல்லையற்ற தொன்மை மொழி
இனிய நல்மொழி
செயற்கையான சூழ்ச்சிகளால்
சிதைந்து மாள்வதா? – சீறிச்
சிங்கமெனத் துணிந்தெமது
மொழியைக் காத்திட....

"என்னைப் போன்று தலைநிமிர்ந்து
எதிர்த்து நின்றிடு - இன்னல்
எதுவரினும் துஞ்சிடாமல்
வெற்றி கண்டிடு"
என்னவுணர் வூட்டியதேன்
சோக காவியம் - தன்னை
இசைத்திடும் நல் மலையகத்தை
ஏறிட்டிதோ பார்

*14.06.1964* சுதந்திரன்

## கவிதையின் களபூமி

உளவுத்தொழிற் பொழுதினிலும் கவிதை கேட்கும்
உயர்நாற்று நடுகையிலும் கவிதை கேட்கும்
பழனத்தி லிராக்காவல் காக்கும்போதும்
பட்டிகளில் மாடுகளைப் பார்க்கும்போதும்
அழகு நெல்லை வண்டிகளில் லேற்றிச்சாலை
யதன்மீது போம்பொழுதும் கவிதை கேட்கும்
பொழுதுபோக் காய்தினமும் மாலைவேளை
பொடுபொடென வுடுக்கினொடு கவிதைகேட்கும்

நீரிறைக்கும் காலையிலும் கவிதை பூக்கும்
நெற்குற்றும் வேளையிலும் கவிதை பூக்கும்
சீரியபுத் தாண்டு, பொங்கல், புதிருண்ணும் நாள்
திருவிழா மணநாட்கள் கவிதைபூக்கும்
நேரிழையர் பன்பிடுங்கல் பாயிழைத்தல்
நீண்டவழி நடக்கையிலும் கவிதை பூக்கும்
ஊரிலொரு கொண்டாட்ட மென்றாற் தப்பா
தூஞ்சல்கோ லாட்டமொடு கவிதைபூக்கும்

காதலர்கள் பிரிவூடல் கூடற்போதும்
கவிபிறக்கும் இன்பதுன்ப நேரத்திற்பூந்
தாததனைத் தோற்கடிக்கும் சுவையிற்பச்சை
தாத்தாக்காள் பாட்டிகளும் கவிதைசொல்வீர்
தீதகலும் மட்டுநகர் மண்ணின் சத்திற்
திறமையினா லியற்கையாய்க் கவிதை கூறும்
மேதைகளே, நும்பெருமை கவிதையாற்றல்
மேதினியோர் கதைகதையாய்ச் சொல்வரன்றோ

(24.08.1963 நடைபெற்ற மட்டுநகர் தமிழ்விழா கவியரங்கில் பாடியதில் ஒருபகுதி)

*08.11.1964 ஈழநாடு*

## தியாகியே

பாலர் முதல் விருத்தர் வரையார்க்கு
பட்சம தாயுதவும்
சீலம் நிறைந்தவனே - ஒப்பில்லா
தியாகி நீ தானல்லவோ!

இத்தரை நீ பிறந்த — கடமையில்
இம்மி வாழும்
சுந்தரச் சேவை செய்து - நரரின்
சுகம் வளர்க்கின்றனையே!

மாந்தர் குலத்தின் சுத்தம் - பேணிவரும்
மாண்புநிறை யுன்னை நெஞ்சில்
ஏந்திச் சிலை வடித்து - தினந்தினம்
ஏற்றினு மீடில்லையே!

நண்டு சிப்பி கதலி - வேய்போறத்தங்கள்
நற்சந்த திக்காக
தொண்டு புரிந்தழியும் - குறுநோக்கம்
தோழவுனக்கில்லையே

தானழிந் தேயெவர்க்கும் - சுவை,கந்தம்
தக்கவொளி தந்திடும்
சீனியுப் புச்சந்தனம் மெழுகு
திரிநிகர் மெய்த்தொண்டனே!

வெண்ணுரை தள்ளித்தள்ளி - எம்மேனியில்
மேவு மழுக்ககற்றி
தண்ணீரி லேகரையும் - சோப்பு நண்ப
தன்மநின் சேவை வாழ்க!

உன்னுயர் தியாகத்திலே - நூற்றில்
ஒருபங்களவு நரர்
தன்செய லில்மிளிர்ந்தால் -- அன்பா இந்த
தரணி சொர்க்கமடா

*15.08.1965* சுதந்திரன்

## கோப்பாய் கோமானே

தமிழதுவே ஆத்மாவாய்ச் சரீரமாகத்
தமிழதுவே குருதியதாய் அணுக்களாகத்
தமிழதின் வாழ்வேயெண்ணப் பேச்சாய் மூச்சாய்
தமிழ்காக்கும் பணியதுவே செயல்களாகத்
தமிழினத்தின் தவப்பேறாய்ப் பிறந்த கோவே
தமிழ்ப்பற்று மிக்கோராய்த் தமிழர் வாழத்
தமிழுணர்வைச் சதா தூண்டும் கோவே, கோப்பாய்
தந்தபெரு நிதியமுனை மறக்கப்போமோ!

அறமொன்றை உயிர்மேலாய் மதித்தே அத்தால்
அழியாத பெருமை பெற்றுத் தமக்கோர் வாழ்க்கை
நெறிகள், கலை, கலாசாரம் வகுத்தேயிந்த
நீணிலத்தி லேஎகிப்தில், கிரேக்கில், றோமில்
நிறைவு வெறு நாகரிகங் காணுமுன்பே
நிலையான நாகரிகங் கண்டு வாழ்ந்த
மறத்தமிழர் வாழ்வுமறு மலர்ச்சிகாண
வழிகாட்டும் மேதையுனை மறக்கப்போமோ!
நெற்றிக்கண் காட்டிமிரட் டிடினும் ராஜ
நீதிநிறை அவைகளிலே நீலகண்டன்
குற்றத்தை குற்றமென்று துணிந்து சுட்டிக்
கூறுமுயர் நக்கீரன் மறுபிறப்பாய்(ச்)
சற்றேதும் அஞ்சாது ஈழநாட்டில்
தமிழினத்தை தமிழ்மொழியை வாழ வைக்க...
'குற்றத்தை குற்றமென்றே' காட்டுங்கோப்பாய்
கோமகனே நின்வீரம் மறக்கப்போமோ!

'எனதுமொழி இனிய தமிழ்' எனது நாடு
ஈழமணித் திருநாடு, எனது நாட்டில்
எனதினத்தை யார் ஆளவுரிமையுண்டு
யாமார்க்கும் குடியல்லோம், எங்கட்கீண்டு
தனியான வரலாற்றுப் பெருமையுண்டு
சால்புண்டு எனத்தமிழர் தலைநிமிர்ந்து
இனிது சக இனத்துடனே நட்பாய் வாழ்தற்
கேற்றவழி யுரைத்தவுனை மறக்கப்போமோ

தன்னைப் போல் பிறரைநே சிப்பதற்கும்
சமத்துவமாய் இனங்களெலாம் வாழ்வதற்கும்
மன்பதைகள் இன்பமதை துய்ப்பதற்கும்
மானிடத்தை உயிர்மேலாய் மதிப்பதற்கும்
அன்பறிவு, கல்வி, தொழில் வளர்ப்பதற்கும்
ஆதிக்கவெறி முற்றாய் அழிவதற்கும்
ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும்
ஓர்நாட்டுக் கிணைப்பாட்சியே நன்றென்றும்...

போதிமா தவன், யேசு, நபிகள், காந்திப்
புனிதர்களின் நன்னெறிகள் தமைப் பின்பற்றி
நீதி நிலைநிறுத்தி அன்புநரரை ஆள
நேர்மை, உண்மை, உரிமை, சுதந் திரங்கள் வாழ
சாதி - மத - வர்க்க- இன மொழித்துவேசம்
தகர்த்த நட்புநிறைந்த புதுஈழம் காண
மேதினியில் இணைப்பாட்சி கண்டிப்பாக
வேண்டுமெனு முன்ஞானம் மறக்கப்போமா!

ஆட்சியினைக் கைப்பற்றப் பதவிப்பித்தர்
அருந்தமிழை ஆட்டக்காய் ஆகாதீழ
நாட்டு மக்கள் இன, மார்க்க, மொழியாம் போரால்
நலிந்து 'நயவஞ்சகருக் கிரையாகாமல்'
மேட்டிமையாய் வாழ – ஒரு இனத்தினுக்கு
மேற்பட்ட பல இனங்கள் வாழும் எந்த
நாட்டினுக்கு மேற்ற - இணைப்பாட்சி தேர்நின்
நன்மேதா விலாசத்தை மறக்கப்போமோ!

ஈழமணித்திருநாடு சுதந்திரத்தை
ஈட்டுதற்கு பெரும்பான்மையினத்தினோடு
தோளோடுதோள் கொடுத்துழைத்த தமிழைப்பேசும்
தூயவினம் வஞ்கரால் அழிதல் தம்மை
நீளறிவுக் கண்கொண்டு கூர்ந்து நோக்கி
நீணிலத்தி லெம்முரிமை யாவும் மீட்டு
வாழவுரி மையுணர்வை யூட்டி வைத்த
வன்னியசிங் கேறுநினை மறக்கப்போமோ!

*26.09.1965* சுதந்திரன்

## தகுதியென்றால் என்ன பொருள்

ஆர்வமிகப் பொங்கிய நாள்,அந்தநாள், பேப்பரிலே
பேர்வருவ தொன்றைமட்டும் பெரும் பேறா யெண்ணியநாள்,
சீர் தளைகள் இன்ன பிறசில போதே மாற்றிடினும்
ஓர் பொழுதுஞ் சோராம லோயா தெழுதிய நாள்....

அந்நாள்..ஆற்றல்...படைப் புத்திறன், அருங்கருத்து .
சிந்தனைகள், தேராமல்...சினேகிதங்கள், போக்கு இஸம்
சொந்தம், காக் காய்பிடித்தல். சொல் முகமன், 'சம்திங்கள்'
எந்த மலைப் பிரச்சினையும் 'இரத்தினக்கல்' லாய்க்காட்டல்

பலநாள் விளம்பரம் செய் தேதிறமை யில்லாரைக்
கலைஞர்களா யாக்கு கலைகைவந்தோர், வேண்டாத
பலரை மறைத் தொதுக்கி பழி வாங்கி வெற்றி கொள்வோர்.
கலையுலகில் வாழ்ந்த வுண்மை காணாததுர்ப் பாக்கியநாள்....

ஆளை மதிக்காது ஆற்றல், ஆக்கம் மதித் தென்
நாளும் கலை வளர்க்கும் நல்ல மனமுள்ளோர்கள்,
வாழும் இளம்பயிரை வளர்க்குமுயர் நோக்கு குறிக்
கோளுடன் தொண்டாற்றுகின்ற கொள்கைவைரம் பாய்ந்தோர்..

தன்னையினம் கண்டு கொள்ளுந் தகுதிபெறாநாள்....வெளுத்த
தண்ணீரெலாம் பாலாய்த் தான் நம்பு மற்றையநாள்
வண்ணப்படைப்புக்களை வாஞ்சையுடன் படைத்துக்
கண்மூடிக் கொண்டோரே பேப்பர்க் கனுப்பிட நம்பி நம்பி...

இன்று வரும், நாளைவரும், என்னவெ திர்பார்த்தேன்,
ஒன்றும் வரவில்லை...ஓடினவெ ஆண்டுசில
நன்றெழுத்துச் 'சூக்குமத்தை' நாளும் அனுபவத் தாற்
கண்டு கொண்டேன்...தோல்விகெட்ட காலத்தை மாற்றியது!

என்படைப்பும் பத்திரிகை யில்வருவதற் குத்தகுதி
நன்று பெற்ற தோயா முயற்சியினால்...அந்நாளில்
'இன்றதிக விற்பனையா லேதர முயர்ந்தது தான்'
என்றுரைக்கும் பேப்பரன் றோர் போட்டி நடாத்தியது.

அந்த விதழ் வைத்த பல போட்டிகளில்...போட்டியின்றி
எந்தன் படைப்புகளை எடுத்தெறிந்தது என்றாலும்
அந்தச் சிறியகவிப் போட்டிக் கிறுதியதாய்
எந்தன் கவிதை யொன்றை யும் மனுப்பிப் பார்ப்போமே....!

என்று துணிந் தேன்கவிதை இதற்கென் றெழுதவில்லை
ரண்டாண்டு கட்குமுனம் சாட்சாத் அதே இதழுக்
கென்றே அனுப்பி வரா...வென் கவியிலோர் கவியை
அன்றனுப்பினேன் மிண்டோர் அட்சரமும் மாற்றாமல்...

அக்கவிதைப் போட்டியிலே அடித்ததுமு தற்பரிசை!
அக்கவிதை யைமுன்சா தாரணமாய் போட்டிடவே
தக்க தல்லவென்று தள்ளும் சாட்சாத் அதே இதழே
தக்க தென்றேற் றுப்பரிசும் தருகில் 'தகுதி' யென்னே?

அன்று தொட்டுப் போட்டிகளிலோ...சும்மாயோதகுதி
என்றாற் பிரசுரிப்போம் என்பதை வாசித்திடுங்கால்
நன்றாய் நகைக்கின்றேன், யான் சிரித்தால் குற்றமதே
என்றால் மன்னித்தருள்க,
இலைச்சிரியுங்கள்....இம்...ம்...ஈம..ம்...ம்...

26.12.1965 சுதந்திரன்

## பஸ்மகாத்மியம் -1
## முன்னும்.... பின்னும்.....

அஸ்வதாட்டியம், ஒலிஒளிவாயு,
புஸ் எனும் றொக்கற், மனோவே கத்திலே
பஸ் ஒன்று இ(ப்)போ சேர்ந்தது,
உஸ் என உறுமி ஒரு நகர் நோக்கியே....

நாட்டின் முதுகெலும் பென்னமே டைகளில்
கூட்டத்திற் சொற்பொழி வாளர்வர் ணிக்கும்
கிராமங் களினையூ டறுத்துப் போகையிலே...

கிராமச்சங் கத்துச்சேர் மனின்'பை' ஓடரில்
நட்ட 'பஸ்ஹோடிங் பிளேஸ்' ஸினை நட்டா
முட்டிகள் யாரோ பிடுங்குமோர் சந்தியில்....

தரித்து வழமையாய் தையலர் வாலிபர் ,
சிரித்திர ரெனக்கால் நூற்றுவ ரேறினார்,
ஏலவே 'கிறவுட்' டாயிருந் திட்டத்தில்
மேலுமே றிடின் அது என் செய்யும் கறுமம்?
சலதாரை நீரையுந் தன்னின மெனக் கொள்
அயலகடல் போற்பொறு மைமிகும் அந்த பஸ்
ஏறியவர்களுக் கெதுமியம் பாததாய்ச்
சீறித் தொடர்ந்து சென்றது தன் வழி!

புதிதாய் ஏறிய பிரயாணி கட்குள்ளே
அதிக கருணை யாளரு மொருவர்
இருந்தார், விஷயம் தெரிந்த அந்நபரும்
பெருந்தொகை நின்று செல பெஜிஞ்சர்களுடன் பஸ்
கம்பியைப்பற்றியே கடுந்தவம் உளமுடல்
வெம்பிடச் செய்தனர் வெளவால் ஆசனம்!....
'மனிதரா நீங்கள்! வயோதிபர், பாலகர்

வனிதையர்க் கேனும் சீற் வழங்கலா காதா?
'எத்தனைநேரம் இடுப்பிற் குழந்தையோ
டிப்பிள்ளை நின்று இடர்படு கின்றது?'

என்றுநிற் போர்களெல் லோரதுசார்பிலும்
நின்றே முழங்கினும், நேரிழை யொருவளின்
நன்றிபெற் றிடவவர் நாவுளைந் திடநவில்
கின்ற பொன் மொழியெலாம் புறக்குட நீரதாய்ப்

போயின வன்றியப் பொதுநலத் தொண்டரின்
வாயுரை மதிப்பும் பெற்றில....எதிர்வரும்
இடங்களில் அநேகர் இறங்கலா லவர்க்கு மோர்
இடங்கிடைத் திடஅவர் 'சீற்' றொன்றிலே

நடுத்தர வயதினர், முதியவர், எனப்பலர்
அடுத்த பிளேசிலே அங்கலாய்த் தேறினர்

மீண்டுமே 'கிறவுட்" ஆனதாற் பலபேர்
தூண்டா மணிவிளக் காகியே தொங்கினர்
முதுகுவில் லாகுமோர் மூதாட்டி யாளுமப்
பொதுநலத் தொண்டரின் முன்புதான் தூங்கினாள்!

இளநங்கைக் கிருக்கைமற் றோரிடம் கேட்டவர்
கிழவியின் துயர்கண் டிளகவேயில்லை
பிறர்க்குமற் றோரிடம் கோரிய உதவியை
அறநெறி யாளர்தான் ஆற்றவேயில்லை

'என்னை எம்.பீ யாய் இம்முறை அனுப்பிடும்
நன்மைகள் அனந்தம் நாட்டுவேன் சத்தியம்'
இன்னபோ திருக்குமெம் - பியுமுங் கட்குச்
சொன்னவை நூற்றிலொன் றேனுஞ்செய் தாரா?
அன்னவர் போல்யான் ஆசை காட்டேன், மெய்!

சொன்னவை மேலாய்ச் செயலிற் செய்வேன்,
எனவாக்குறுதிகள் எறிந்து எம்.பியாய்
நன்னிலை பெற்றபின் நாடுடன் மக்களின்
இன்னல்கள் கண்டுமே இதயமற் றோர்களாய்த்
தன்னலம் பேணிடும் தலைவர்கள் சிலர் போல்
புதுமை விரும்பிடும் பிறர்துயர்க் குருகிடும்
பொதுநலத் தொண்டரும் பூட்டிடும் வாயராய்ப்
பதுமையாயிருந்தனர்...பறந்தது பஸ்ஸும்
கதியதிற் கடுகதி காட்டியவாறே.

*11.06.1966* சுதந்திரன்

## தனிச்சிறப்பு

எம்மொழியும் தாரா இனிய 'ழ' கரவமு
தம் சொட்டுந் தீந்தமிழ்த்தேன் யான் அருந்திட ஐப்புலன் ஆத்
மா, முழு இன் பம்பெறின் என்னைத்
தமிழ்ச்சே யாயிறைவா
பூமேற் பிறப்பியுமோர் போது

*13.08.1967* சுதந்திரன்

## பார்மீதில் இணையுமுண்டோ

வேர் கொண்ட நான்குநில வளமெழில்கள் குன்றாது
பின்னிப்பிணைந்தியற்கைப்
பெட்டிநிறை கலையழகுமிளிரும் ‘ஏ தேன்” ஆகப்
பிருதுவியின் ஆதி மனிதன்
சீர்கொண்ட ஆதாமின் இருகழற் சுவடதோ,
சிவன், புத்தர் சுவடோவெனத்
திருவுற்ற பாதசுவ டுடையமலை பிறவரைகள்
சிறந்த நீர்வீழ்ச்சி, நதிகள்,
நீர் கொண்ட ஆழமறி யாவற்றிடாக் கேணி
நிலாவரையினால்....ஒருமுழம்
நீளமே ஆழமுடை ‘கன்னியா’ வென்றவென்
நீரூற்றுக் கிணறுகளினால்....
பாழ் கொண்டகடலுள் நன் னீர்சுரக்குங் கீரி
மலையினால்....பாடு(ம்) மீனால்
பாங்குடன் முழுவுலகு காட்டீழ நாட்டுக்குப்
பார்மீதில் இணையுமுண்டோ?

*26.09.1967* சுதந்திரன்

## பூம்புகாரில் ஒருநாள்

### (வெண்பா)

செந்தேன் அமுதச் சுவையார் தமிழ்வளர்த்த
சுந்தரக்கா வேரியெனுந் தொல்பதியின் - இந்த்ரவிழாக்
கண்டிடஈ ழத்தாற் ககனவழி யூர்தியிற்தேன்
வண்டாகிச் சென்றன வண யான்!

## புகார்த்துறை காணல்

### (கலித்துறை)

வான்மறந்து பொய்ப்பினுந்தான் வரண்டே பொய்க்காது புனல்
தேன்சுரந்து பாயுமெழிற் தென்னகத்தின் கங்கை நல்லாள்
மீன்கரந்து ஓடிவிளை யாடு'பொன்னி' க்காவிரியாள்
தான்பரிந்தா ழிப்பதிசே ருந்துறை இறங்கினனால்

## இளங்கோ அடிகள் சந்திப்பு

"ஏன் கவிஞ! மனச்சோர்வு? வாரீர் நன்றாய்
    எழிற் சம்பா பதி வளம்பார்த் திடலாம்" என்றே
தேன் குழைத்த தமிழமுதில் இளங்கோ சொற்றச்
    சிரித்தொப்பி அவர் குழுவோ டேகலுற்றேன்

## துறைமுகப் பண்டகசாலை

### (விருத்தம்)

துறைமுகத்தே நிரையினிற்பாய் விரித்தெண் திக்கின்
    தூர நாட் டால்வருவங் கங்கள் நிற்க...
இறக்குமதிப் பண்டங்கள் புரவிக்கூட்டம்
    ஏற்றுமதிப் பொருட்பொதிகள் இமயமாட்டம்
சிறப்புறுபண் டகசாலை நிறைந்தும் முற்றத்
    தினிற் தேக்க...சோழர்'புலிச்சின்னம்' முற்றும்
பொறித்துரிய சுங்கவரி எடுத்தபின்தான்
    பொருட்போகும் வழியில்வெளிப் படுத்திநின்றார்.

## கரையோரமும் மருவூர்ப்பாக்கமும்
## (பள்ளு)

பண்டசாலைநின் றேபோயக் கடற்கரைப்
பக்கம் வாழ்மீன வர்தம் குடிசைகள்
கண்டதிமகிழ் கொண்ட பண்டவளம்
கண்டிட 'மருவூர்ப்பாக்கம்' சென்றோம்
விண்தொடு வேயா மாளிகை, மாடங்கள்
வேற்றுநாட்டு வணிகரின் கூடங்கள்
பொன் நவமணி விற்போர் மறுகுகன
பொற்கொல்லர், தச்சர் பல்தொழிலாளர்கள்....

வெவ்வேறாய் உறை வீதிகள் கண்டும்
வெகுமகிழ்வுடன் அங்காடி நின்றுமே
செவ்வையாய் நிறை ஈழத்துணவதும்
சீர்ப் பொருள்பல கண்டுமின் புற்றனம்

## பட்டினப்பாக்கமும் அரண்மனையும்

கட்டுறை கொடித் தேர்வீதி யும், பீடி
கைத்தெரு, வாணி கர்வசிக் கும்மாடி,
மேட்டுறைசோதி டர்நன் மருத்துவர்
வேளாளர், மறை யோர்வாழ் தெருக்களும்

வட்டமாய்ச் சூழ வேயிலங்க ஒளிர்
வாய்அரண்மனை யும்எழிற் பூம்பொழில்
பட்டினப்பாக்கத் தின்மத்தி தோன்றிடும்
பான்மைகூற நா(க்) கோடியே வேண்டும்

## நகரக் கோவில்கள்
### (விருத்தம்)

சிவபெருமான், பலதேவன், முருகன், இந்திரன்
திருமால், மன்மதன், அருணனோடு சந்திரன்
நவமாயிந் திரனுடைவச் சிரச்சே னைக்கும்
நல்ஜரா வதயானை, காலனுக்கும்
உவந்தமைந்த கோவில்களி லேவிசேஷ
மாகவிழா நடந்திடுங்கால்....மதத்துவேஷத்
தவறறியார் சமணபள்ளி, விகாரை புத்த
தலங்களலங் கரித்துவாழ்ந் திட்டார்

## நாளங்காடி வெளி

பட்டினப்பாக் கம்'மருவூர்ப்பாக்க' மிரண்டிடை நன்றாய்
வெட்டவெளி யாய்த்திகழ் நாளங்காடி' க் குச் சென்றோம்

கன்னல், பால், தேன், முக் கனிச்சாற்றை வேர்பழுத்த
சின்னப் பலாச்சுளையில் தோய்த்தூட்டவாய்ச் செழித்த
வசந்தச்சித் திரைவருசித்தி ராபூர ணைதொடக்கம்
இசைவுடனீர் பத்தெண்நாள் இந்திரவிழா நடக்கும்

நன் நாளங் காடி மைதா னத்தினில் இலஞ்சிமன்றம்
மின்வெள் ளிடைமன்ற மெனுமைம்மன் றங்களதும்

கொற்றப்பந் தர், பல்கள் கொள்ளுபல் பீடிகைகள்
நற்றோ ரணவாயில், நன்குயர்ந்தோர் மண்டபங்கள்

குருசிற் குமரர், பிற குமரர்உவ கை நிறைய
கரி, பரி, தேர் ஊர்ந்தோராய்க் காவலர்க்கு வாழ்த்தறைய

விரைந்துவருங் காட்சிகளும்....வேதசம யக்கணக்கர்
உரையாடும் பட்டிமண்ட பத்துள்ளோ தும்மார்க்கக்

கோட்பாடு வாதிப்போர் கொள்கைவிளக்கத் தெளிவுக்
காட்சிகளும் பள்ளிகளிற் கற்றோர்கள் சொற்பொழிவும்

வீடுகள், மன் றங்கள், நகர் வீதிகள், முற்றங்கள்முற்றாய்
ஆடுந் துகிற்கொடிகள் அலங்கரிப்பும் பார்க்கலுற்றோம்

## கலையரங்கு

தண்டோரா ஆர்ப்பரித்தல் தான்கேட்டோர் சாலைவழி
சென்றோம் சிறுதொலைவு சென்றோர் அரங்கைவிழி

கொண்டோம், அரங்கின் இசைச்சூழலும் முழவுடன் யாழ்
பண்சேரும் பின்னணியில் ஓர்பாவை யாடலுற்றாள்

அல்லிய முதற்கொட்டி யீறாய்ப் பதினோர்வகை
நல்நடனங்கள் நளினத் தோடாடி டும்தோகை

'மான்விழியள் யார்? எனமுன் 'மாதவி' என்றாரிளங்கோ
தேன்மொழியாள் மாதவியின் சீர்கலையிற் காதல் பொங்க...

கண்கள் படைத்தபயன் காசினியிற் கிட்டிய(து) என்(று)
எண்ணியுவ கைக்கடலில் இன்பமுடன் நீந்தலுற்றேன்

## திடீர்த் திருப்பம்

மண், விண் அதிர்ந்திடவாய் வருமோர் பெருமொலியால்
மின்சக்தி தாக்கலொப்ப வே அயர்ந்தேன் பின்பெழுந்தால்

இளங்கோ, பரணர் புத்த தத்தருருத் ரங்க(ண்)ணனார்
வளங்கொழிக்குங் காட்சியனைத் தும்மாய்கையாகி....நகர்

(இற்றை நிலை)

காவிரிப்பூம் பட்டினத்தின் காட்சிகன வாய்க்கலைய
காவிரியா றாழியிலே கலக்குமிடத் தே தொலைவில்

சிறிய கிராமமொன்றே தெரிந்த தவ்வூர் தான் அன்று
குரிசில் இளங் கோவுருவிருக் கும் 'பூம் புகார்' என்று

விண்டனன்யா ரோவொருத்தன் வேதனையால் நெஞ்சுவிம்மி
கண்கள்குள மாய், நதியாகிக் கடலாய் - தொண்டைகம்மி

(சுய உணர்வு)

சிந்தனைத்தே ராற்தள்ளப் பட்டவனாய் வீழ்ந்துலகாள்
எந்தனினம் நொந்துரிமைக் காயேங்கும் இன்றையநாள்..

வந்தென் குடிசையிற்கந் தற்பாய் இருந்த துணர்ந்(து)
'எந்தமக்கே சொந்தமதா இந்தநிலை?' என்றழுதேன்

(தேற்றம்)

உலகும் தமிழ்மொழியும் உள்ளளவும் யாழ்சீலச்
சிலம்பும், மணிமே கலை, பட்டினப்பாலை

இன்னபிற நூற்கள்சில என்துயர்மூட் டும்நேரம்
சென்னைநிக ழும்உலகச் சிறந்ததமி ழாராய்ச்சி

மாநாட் டழைப்பிதழொன்றீந்தான் அஞ் சற்காரன்
தேனார் மொழி, இனத்தின், சீர்த்தாய்த் தமிழகத்தின்

'எதிர்காலம் பொற்காலம்' என்றவ் விதழ்விண்டே
புதுத்தெம்பூட் டிற்றோர்நாள் பூம்புகார் காண்க!' என்றே!

## முதல் இரசிகன்

விடியுமட்டு மிராமகதை நாட்டுக்கூத்தை
பேஷாகக் கவனமுடன் பார்த்துக் 'கூத்து'
முடிந்த பின்பு ராமனுக்கு சீதை என்ன
முறை? என்றே கேட்போரும் வாழ்ந்த காலம்
குடிசோடா, மலைப்பிஞ்சு, சாணிப்பேளை
குஞ்சுவரா முதுமுட்டை, கதிரையன்ன
வடிவான பரிசுகளை கலைஞர்க்கீய
வக்கில்லாக் கஞ்சர்களே வாழ்ந்த காலம்....

'டிக்கற்று'றுக் 'கியூ' 'ஹவுஸ்புல்' 'தோர்ட்ச் செக்கன்ற் ஃபஸ்ற்'
ருக் 'கலறி' 'பல்கனி'யாற் பிரிந்திடாது
பக்குவமாய் பாட்டிமுதற் 'பாப்பா' வீறாய்
பசும்புற்கம் பளத்தினிலே 'மிக்கட்' ஆக
ஒக்கவிருந் தினாமாயே கலை விருந்தை
உண்டு மகிழ்ந் திடு காலம்...ஒரு சாரார்க்கு
உட்காரப் 'பஞ்சமர்க்குப் பிரத்தியேகம்'
உண்டெனும் 'நோட்டீஸ்' அடிக்கத் தெரியாக்காலம்

பாற்கவர்ச்சி எனும் மூல தனம் போட்டாற்தான்
பணப்பெட்டி நிறையும் என்போர் பருவமாதர்
கூச்சத்தைப் பயிர்ப்பு அச்சம், மடம், நாணத்தைக்
கொலை பண்ணி ரசிகர்மேற் குற்றம் சாட்டி
நீச்சலுடை 'சிக்' உடையில் அரை, கால், முக்கால்
நிர்வாணக் காட்சிகளைத் திரையில் காட்டி
"போச்சுதெமர் பண்பையோ!" என்போர் கூற்றைப்
புறக்கணிக்கும் அறவறிவு போதாக்காலம்

உடைப்பஞ்சம் அடித்த 'பிர பல ஸ்டாரை'
ஒளித்திரையில் பார்த்திடு நாகரிகமாதர்
நடைமுறையில் வாழ்வதையே சினிமாவாக்கி
நாட்டினில், றோட்டினில், வீட்டினில், நடிகை பாஷன்
கடைப்பிடித்து பிறேசியர், கண்ணாடி, நைலோன்
கழுத்துக் கையில்லாக் கால் காட்டும் 'ட்றெஸ்ஸிங்'
உடைச்சரத்தா லுள்ளங்கள் தமைத் துலைத்தே
ஒழுக்கத்திற்கு(உ)லைவைக்காக் கலைவாழ் காலம்

மேடையிடத் தெரியாத காலம் சும்மா
வெறும் நிலத்திற் 'களரி' கட்டி 'வார்' வளைத்து
ஆடையா பரணங்கள் கிரீடம் செங்கோல்
அரசன் சேவுகன் சமமாய் அணிந்து ஆட்டம்
சோடையின்றி அனைவரும் ஆடிக்களைத்தும்
சோராமற் துள்ளி நடித் திட்ட காலம்...
கோடையிலோர் கிராமத்தில் இரவு ஒன்றில்
கூத்தொன்றை ஆடினார்கள்....ரசிகர் சேர்ந்தார்

விடிந்து பனைப் பொழுதினில் மங்களமும்பாடி
விட்டபின்பு... ரசிகர்களும் எழுந்தார் கூத்து
முடிந்ததென்று முதல் ரசிகன் தன்னை நோக்கி
முசுப்பாத்தி காயிரண்டாம் ரசிகன்தான் "எப்
படி காணும் கூத்து"? என்று கேட்க முன்னோன்
பதிலிறுத்தான் வருமாறு "உடும்பு ஆட்டம்
படிப்பெல்லாம் மோசமில்லை ஆனால் ஓர் ஆள்ப்
பாரமப்பா கூத்து!"என்றார் புதிர் ரூபத்தில்'.

கூத்து ஒன்றோர் ஆட்பாரம் என அன்னோனும்
கூறியதைச் செவியுற்றோ அ∴தே கூத்தைப்
பார்த்தவர்கள் பிரமித்தார் கருத்துத்தேரா
மற்திகைத்தார்இ முதல் ரசிகன் தன்னைப் பிய்த்துக்
கூத்தொன்று ஆட்பாரம் என்பதைத்தான்
கூறப்பா விபரமதாய் என்னக்கேட்டே
ஆத்திரமுற்றனர் எனினும் புதிர் அவிழ்க்க
அந்த முதல் ரசிகனுக்கே முடியவில்லை

முடிந்ததெனின் எவ்வணம் ரசிகத் தேர்வில்
முதல் இடத்தை அவன் பெறுவான்? சூட்சுமத்தை
விடியுமட்டும் கவனித்துப் பார்த்திருந்த
விவேவிகளில் சிலர் அறிவார், அம்மனோரில்
துடிப்பு நிறை வாலிபத்தோ(டு) எக்ஸ்-றேக் கண்கள்
தொலை நோக்குக் கெண்டரண்டாம் ரசிகன் அப்போ
வடிவாகக் கூத்து ஒன்று ஓராட்பாரம்
வாய்த்த கதை விளம்பினன் பின் வருமாறாமே!

**(வேறு)**

முதல் ரசிகன், நெட்டை அவன் முதுகிற்குப் பின்னாலே
சுதியாய்யுட்கார்ந்தான் ஓர் 'சோட்' மனிதன்,நாடகத்தின்
ஆட்டத்தைப் பார்ப்பதற்கு ஆனமட்டுமே கழுத்தை
நீட்டினான் கூடவில்லை. நிமிடம் சில நகர...
முழந்தாளில் மண்டியிட்டும் முதல் ரசிகன் தோள்களிலே
அழகாகக் கையூன்றி யும் பார்த்தான், வாய்க்கவில்லை
ஆட்டமொன்று ஜோராக அரசன் வந்து ஆடுகையில்
'சோட்' நரனுக்குங்குஷியாய் சுதியேற அவ்வேளை

ஒண்ணாம் நம்பர் ரசிகன் உயர் மலைத் தோள் ரண்டினிலும்
வண்ண அணிற்பிள்ளை பழத்தில் மெதுவாய் ஏறுதலாய்
கால்கள் இரண்டினையும் கழுத்தில் வலம் - இடமாய்
மேல்வைத்தே கும்பத்தில் ஏறிவிட்டான் 'சோட்'மனிதன்
முதல் மனிதன் தோள்மேலோர் முழுமனிதனேறியதே
முதல் ரசிகனுக்குரசிப் பிற்தெரிய வேயில்லை
கூத்து முடியுமட்டும் கும்பத்தில் ஓராள் உட்
கார்ந்ததையுங் அந்தமுதல் ரசிகன் தானறியான்
புலன் அனைத்தையுங் கலையிற் புகுத்திச் சுவைத்த அந்தக்
கலாரசிகனுக்க..து காணவில்லை வேற்றுமையாய்
அந்த முதல்ரசிகன் அடியொற்றி யேகலையை
இத்தரையிலே சுவைத்தால் இன்பத்திற் கேது பஞ்சம்?

*09.07.1968* சுதந்திரன்

## ஒரேயோர் வரந்தா கந்தா

தீமைமிஞ்சிப் பலாத்காரம் தலையெடுத்துத்
தேவர் - நரர் சிறைப்புட்களாய்த் தவித்து
ஆமைகளாய் ஐம்புலன்க ளொடுக்கி வாழ்வில்
அல்லலுற்றுக் கண்களினீ ராறாயோட
ஊமைகளாய் இறையொன்றே தஞ்சமென்று
உணர்ந்துரைக்க...உலகத்தின் இருளை நீக்கும்
நேரமுறு வழியெதென்றீ சன் சிந்திக்க
நெற்றிக்கண் திறந்து பொறி பறந்ததாமால்

ஞானக்கண்ணால் விழு தீப் பொறிகளாறும்
நாநிலத்தைப் பொசுக்குமெனவுமையாளஞ்சி
தானத்தீப் பொறிகடமை யுதரத்தேற்றுத்
தற்காத்துக் குளிராக்கிச் சின்னாளின் பின்..
தேனமுதப் புனல்பாயும் கங்கை தன்னில்
சீராக விட...அவைகள் ஊர்ந்து சென்று
ஞான நிறை குழந்தைகளா யுருவந்தாங்கி
நல்லரச வணப்பொய்கை கிடந்ததாமால்

கிடந்திடுமக் குழவிகளைக் குளிக்கச் சென்ற
கிருத்திகை நங்கைகளறுவர் கண்டே இன்பம்
அடைந்தோராய் ஆளுக்கொன்றாய்த் தூக்கிப்போய்
ஆதரவாய் வளர்க்கையிலே ஓர் நாள் ஈசன்
இடப்பாகச் சக்தியும் சென்றந்தப் பெண்கள்
இடமிருந்த குழவிகளாறினையும் வாங்கி
அடக்கவொணாப் பெருமகிழ்வோடரவணைக்க
அவைகளுடனொரு மகவா யாயிற்றாமாய்!
ஒரு மகவாய் ஆறுமுகம் பன்னீர் கைகள்
உடலொன்று கால்களிரண்டாய்...இவ்வாறு

உருவடைந்து இளமறியாய் வளர்ந்தே இந்த
உலகத்தில் அரக்கரெனுந் தீயபண்பை
கருவறுக்க பழநி, செந்தூர், தணிகை, ஈழக்
கதிர்காமத் தோடு திருப் பரங்குன்றத்தும்
திருவேர கத்தும் அறு படைவீடுற்றுத்
தினமருள்செற் எனது கவித் துதிசேர்கந்தா

என்கவிதை நீடூழி வாழவேண்டும்
எனது புகழ் மலைவிளக்காய் இலங்க வேண்டும்
பொன் வேண்டும் பொருள் வேண்டும் பூமி வேண்டும்
பூவை தெய்வ யானை - வள்ளி சகிதம் நின்னைக்
கண்கள் சிந்தை பூரிக்கக் காண வேண்டும்
காயத்திற் பிணி, மூப்புச் சாக்காடற்ற
குன்றாத எழிலிளமை வேண்டும், இந்தக்
குவலயத்தில் பிறப்புடனே முத்தி வேண்டும்

இன்னவைகள் கேட்கின்றேன், சம்பரதாயம்
இவைகளை நீ தந்தாலும் தராவிட்டாலும்
உன்னிடத்தில் யான் கேட்ப தொன்றேயொன்று
உடல், ஆவி, பொருள், ஆத்மா வில் மேலாம் என்
அன்னை மொழி இனியமொழி தமிழ் ஈழத்தில்
அரியணையில் அனவரதம் வாழ வேண்டும்
நன்னயமார் இவ்வரத்தைத் தரத்தான் வேண்டும்
நாநிலத்தோர் போற்று கதிர்காமக்கந்தா

***01.08.1968*** **சுதந்திரன்**

## அந்தபஸ் ஓடும் வேளை அப்படி நேர்ந்தால்.....

லண்டன் நகரில் ஓடியபின்
லாயக்கில்லையென்றோ – ஏனோ
'கொண்டன்' பண்ணப் பட்டவையிற்
குறிப்பாய் நமது பிரயாணத்
திண்டாட்டத்தைத் தீர்த்திடவே
சீற்றீ பீயும் புதிதாக
கொண்டு வந்தே ஈழத்தில்
குஷாலாய் ஓட்டும் பஸ் ஒன்று

நீண்ட தூரக் 'கடுகதி'யாய்
நெடுநாட் பயணம் பண்ணியதே
ஆண்டோர் நாளில் அ்.தே பஸ்
ஆடியசைந்து பெசிஞ்ச(ர்)ஸ் உடன்
தாண்டிக் குதித்தோர் பஸ்(ஸ்)டாண்டு
தனைச் சேர்ந்ததுவே...'வசு'விற்குள்
மாண்டு போகா ததிர்ஷ்டத்தால்
வந்தோர் இறங்கி மகிழ்ந்தனரே

அறுபத்தைந்து பேர்கள் அள(வு)
ஆன அதற்குள் 'மா(ர்)க்கற்'றில்
கறிகொள் கடகத் துட்செத்துக்
கண்கள் நீலம் பாரித்தும்
முறியாய்ப் போகும் மீன்களென
முண்டி யடித்துத் திண்டாடி
முறிவேர் வைநீ ராயூறிக்
கொட்ட மாந்தர் இறங்கினரால்

கண்டக்ரர் ஒண்லி தங்க...
    கடுகதிபஸ்சை டிப்போ
கொண்டு போய்ச் சேர்க்க ட்றைவர்
    சாரதிச் சீற்றில் குந்தி
ரண்டு மூ ன்றான வெட்(டு)
    ஸ்டியறிங்கால் வெட்ட...ஆடி
ரண்டு முன் சக்கரங்கள்
    உருண்டன திரும்பி...பின்பு...

உருண்ட அச்சக்கரங்கள்
    'ஒப்பிடோம்' எனமறுத்துத்
திரும்பிய வாறே வேலை
    நிறுத்தத்தைத் தொடங்கிச் செய்ய
அருப்பு மீசையினர் சார
    தியினெழில் வதனம் வாடிச்
சுருங்க 'இஸ்டியறிங்' விஸ்ணு
    சக்கரமெனச் சுற்றிற்றே

'போணட்'டை திறந்து ஏதோ
    முறுக்கியும் பயனென்றின்றி
மானராற் தள்ளப்பட்டவ்
    வசு 'ப்ளோக்' டவுனின் பின்னால்
ஊனத்தைக் களையும் 'மெக்கா
    னிக்' குறை இடத்தை நோக்கி
தானிழு பட்டோடிற்று
    சகஜந்தான் சிந்தித்திட்டால்

சவரிசெய் திட்ட வேளை
    சக்கரங்கள் இஸ்ரேறிங்
அவாவறு நிலை யுற் றொற்று
    உழைக்காதி 'ஸ்றைக்' செய்திட்டால்
சவாரி செய்தோர்கள் வாழ்க்கை(!)
    முடிவைக் கற் பனை செய்தாலும்....
முகாரி, ஓ லங்கள்(!) ரத்தம்
    உறையவைத் திடும் அந்தந்தோ!

*04.11.1968* சுதந்திரன்

## புதுமணத் தம்பதிகள்
## சண்முகநாதன் நாகேஸ்வரி வாழ்க!

பார்மேவு வண்ணைநகர்ப் பண்பார் புதியமணச்
சீர்மேவு தம்பதிகாள் செல்வர்களாய்ப் - பேர்மேவு
நன்னயமாய்ச் சண்முகநா தன் நாகேஸ் நீங்களென்றும்
இந்நிலத்தில் வாழ்க இனிது!

தமிழ் வளர்த்திட லால் நல்லோர் சான்றோர்கள் மதித்துப்போற்ற
தமிழ்ப்பணி யாற்றுமாற்றல் தகைமையால் எவரும் ஏற்ற
தமிழ் இனச் சால்புகாத்துச் சண்முக நாதன் நாகேஸ்
தழிழ்இனி மையதாய் ஒன்றிச் சந்தம் வாழ்க வாழி!

தன்மொழியை தன்னினத்தை தாய்நாட்டை
தன்னிருகண் மணியாய்க் காக்கும்
தன்னலமில் லாவீரம் தியாகசிந்தை
செயல்வன்மை ஒழுக்கம் கல்வி
பன்மொழியிற் புலமை பெறுங் தகைமைநிறை
கலைப்புதல்வர் பலரையீன்றே...
நன்னயமாய்ச் "சண்முகநா தன்- நாகேஸ்
வரி" நடப்பாய் வாழ்க வாழி!

வாழ்விலோர் திருநாள்....உங்கள்
மனங்களிக் கின்ற பொன்னாள்
நாள்களில் நன்னாள்...இந்த
நாளில் எம் நீண்ட கால...
உண்மையன் பைப் பாசத்தை
உரிமையை உளந்திறந்து
கண்மணீ மருகா! அன்பு
கனிந்திடும் மகளே! உங்கட்
கன்பு வாழ்த் தாய் ஈகின்றேன்
அனவர தமுமே நீங்கள்
தண்ட மிழ் இனிமையதாய்த்
தரணியில் வாழ்க வாழி!

*24.03 1969*

## நாவலரை நெஞ்சிருத்தி நற்றமிழைக் காத்திடுவோம்

அந்தம் - ஆதி யென்றில்லா
அரனை முருகப் பெருமானை...
கந்தா முருகா சிவாவென்றே
கனிந்த மழலைத் தேன் தழிழால்
சொந்த அறிவால் எவரேனும்
சொல்லிக் கொடாமல் தானாக
முந்தத் தன்மூன்றாம் வயதில்
முறையாய் அழைத்த நாவலரை

தந்தை யென்னும் பெரும்பதவி
தனை நா வலர்க்குத் தாங்குமுயர்
கந்தப் பிள்ளை யர் முதிய
காலத் தெழுது மொரு நாட
கந்தான் 'குறை'யில் நிற்கவவர்
களிப்பாய் அரனின் அடிசேர
அந்தக் குறையைத் தன்வயதொன்
பதிலே 'நிறை' செய் நாவலரை

ஈர் எட்டாண்டு பராயமதில்
இங்கிலீஷ் ஆசான் பதவியதும்..
பார்மீதொப்பற் றிலங்கு தமிழ்ப்
பண்டிதராயும்...தமிழ்புகட்டும்
சீர்மை மிக்க பதவியதும்
சிறப்பாய்த் தாங்கும் ஆற்றல் நிறை
நேர்மை மிக்கார் ஸ்ரீலஸ்ரீ
நல்லைப் பெரியார் நாவலரை

சுத்தத் தமிழை, வடமொழி, ஆங்
கிலத்தைத் துறைபோகக் கற்றே
சத்திய வேத பைபிளையும்
சரியாய்த் தமிழாக்கம் பண்ணி
வைத்தோர்...சைவம் தழிழ்க்காய்த் தன்
வாழ்வைத் தியாகம் செய்தோரை
நித்தம் நெஞ்சில் சிலையாக
நிறுவித் தமிழைக் காத்திடுவோம்

*29.06.1969 வீரகேசரி*

# பண்டார வன்னியன் போல்...
# தாய்நாட்டுக்காக வாழு

வற்றாத வளமிக்க வன்னி நாட்டில்
வாட்சிங்கம் பொறித்தகொடி வானளாவி

நற்கம்பத் திற்பறக்க அடங்காப்பற்றை
நல்லரசு புரிந்திட்ட இறுதி மன்னன்

'கற்பூரப்புல்வெளி'க்குத் தனித்துச் சென்று
கலங்காத பகைவரொரு படையைத் தாக்கி

மற்செய்து வாள்வீச்சின் திறனொன்றாலே
மாற்றாரிற் பலரையுயிர் மாய்த்த வீரன்

"இத்தரையில் வாழ்ந்திட்டால் சுதந்த்ர வாழ்வின்
றேல் மரணம் மேல்" என்று துணிந்து நின்று

யுத்த பலம் வாய்ந்த வெள்ளை மனிதர் முன்றில்
உறுதியுரைத் ததைச் செயலிற் கடைப்பிடித்தோன்

நித்திரையிற் சொப்பனத்தும் அடிமை வாழ்வை
நிராகரித்தோன், சுதந்திரத்தன் மானத் தீபம்

நித்தியமும் மக்கள் நெஞ்சத் தேத்தி வைத்தோன்
நிகரற்றோன் பண்டார வன்(னி)யனாமே

**(வேறு)**

ஈழத்துக் கட்டப் பொம்மன்
எனவுதித்தோன், தாய்நாட்டை
வாழவைத் திடுதல லொன்றெ
வாழ்விலட்சி யமாய்க் கொண்டோன்
ஈழமும்... எழிலார் வன்னி
யும்... தமி ழினமும் நீடு
வாழுமே நீ பண்டார
வன்னியனாகுங் காலை

*01.11.1969* சுதந்திரன்

## கண்ணோட்டம்

காலை தோறும் குணதிசையில்
    கதிரோன் தோன்றி முற்பகல் விண்
மேலே யேறிப் பின்னேரம்
    மேற்கை நோக்கி கீழ்ச்சென்று
நீலக் கடலை பசுங்காலை
    நெடுவான் முட்டும் தொடுவானில்
கோலந் தீட்டி மறைந்திடுதல்
    குதூகலஞ் செய் காலைக்காட்சி!

(வேறு)

விண்ணில் மதி வெட்டியெறி நகமாய்த் தோன்றி
    விறுவி றெனப் பதினான்கு தினங்கள் தம்மில்
தன்னிறைவு பெற வளர்ந்து முழுமை பெற்றும்
    சடந்தேய்ந்து பதினான்கு தினத்தில் முற்றாய்க்
கண்களுக்கே காணாமல் மறைந்தும் மீண்டும்
    ககனத்தில் இளம்பிறையாய் உயிர்த்துத் தோன்றக்
கண்கவரும் கலைக்காட்சி அன்றும் இன்றும்
    காசினியோர் கண்கண்ட யதார்த்தமாமே!

கண்கண்ட யதார்த்தமிதை மாய்கை, பொய்மைக்
    காட்சியென மறுத்துரைத்(து) ஆராய்ச்சிக் கண்ணால்
விண்ணியலார் கண்டு தெளிந் தறிவு ஏற்கும்
    விதத்தினிலா தாரமொடு நிரூபித்தாலும்
மண்ணுலகம் சுழல்வதையும்....இரவி சுற்றா
    மல் விண்ணில் நிற்பதையும் யார் காண்கின்றோம்?
தண்மதியார் தேய்ந்துவள ராமல் நிற்கும்
    தரிசனமும் யார் கண்ணாற் காண்கின்றார்கள்

தன்னிற்தான் சுழல்கிறதுங் கதிரோன் தன்னைத்
தாரணியே சுற்றுவது முண்மையன்றி
விண்ணரசன் தோன்றிடுதல்- மறைதல் பொய்மை
வெண்ணிலவு பூமிதனைச் சுற்றலாலே
தண்ணொளியில் லாத 'சசி'க் கோளத்தின் மேற்
தபனனொளி விழுந்து செய்யுஞ் ஜாலவித்தை
யின் காட்சி யேசந்திரன் வளர்தல்- தேய்தல்
இன்றி வளர்தல் - தேய்தல் இல்லை என்ற

விஞ்ஞான வுண்மையிதைக் கண்ணாற் காண்கின்
விண்வெளி சென் றங்கிருந்து நோக்கலன்றி
இஞ்ஞாலத் திருந்தெம்மாற் பார்க்கவேலா
தென்பதற்காய் உண்மைதனை ஏற்றிடாமல்
விஞ்ஞானி யொருவர் 'றொக்கற்'றுள் ளிருந்து
'விண்வெளியில் கடவுளில்லை' யென்றாற் போன்று
அஞ்ஞானம் பேசிடுதல் மடமை, ஒன்றை
அறிதற்குரிய நிலை நின்றே நோக்கிற் தோன்றும்!

*04.06.1970 வீரகேசரி*

## வராத இடம் போனானோ

கற்கண்டுச் சுவை சொட்டச் சமுதாய
 மெனுமுடலிற் கடுநோய்கள் களைவதற்கு
நற்றிறமார் கவிதைமருந் தீந்துவளர்த்
 துக்காத்த நாவலரே! ஆற்றல் மிக்க
விற்பனரே! ஈழத்தின் நிகழ்காலக்
 கவிக்குலமுன் னோடியாய்க் கவிப்படைப்பில்
அற்புதஞ்செய் மஹாகவியே! தேவர்தமை
 மகிழ்விக்க அமரக்கவி யாகினாயோ!

ஈழத்துக் கவியுலகில் புதுமைபல
 ஈட்டினோய் 'குறும்பா'வைத் தமிழுக்கீந்தாய்
மூளுகின்ற காமமதிற் கடிமையுற்று
 முறைதவறி இந்திரனே பிறன்மா தைப்பெண்
டாளவெண்ணித் தொட்டதும் நின் சிந்தனையால்
 அகலிகையைக் கல்லாக்கித் தமிழ்ப்பெண்கற்பை
நீளுலகில் இன்னதெனக் காட்டிவைத்த
 மாகவியே! நினை மறக்கப் போமோ அந்தோ!

மனிதனையே காவியநா யகனாக்கி
 மங்களஞ்சேர் பிறப்பிருந்து இறப்பீறாக
மனிதவாழ் வினில் நிகழும் இன்ப துன்ப
 வரலாற்றைக் கதையாக்கி நுணுகியாய்ந்து
'மனிதன்' என்றோர் 'புதுமைக்காவியம்' படைத்து
 மாண்பு மிக்க தமிழன்னைக் கணி செய் வீரா!
புனிதநிறை மகாகவியே! நின்னையிந்தப்
 பூதலந்தா னுள்ளளவும் மறக்கப் போமோ!

07.07.1971 சுதந்திரன்

## நின்சேவை தொடரும் திண்ணம்

வல்லவரில் வல்லவரே! மானமுள்ள
 தமிழ் மகனே! மாண்பு மிக்க
நல்லவரில் நல்லவரே! ஈழவன்னை
 தவப்புதல்வா! நாகநாதா
அல்லலகற் றெந்தமிழ்த்தாய் அனவரதம்
 இலங்கைதனில் அரசோச்சற்குச்
செல்வா வழி தனைத் தேர்ந்து சுயநலத்தைத்
 துறந் திறுதித் தினம் வரைக்கும்
சொல்லாலும் செயலாலும் துணிந்துழைத்த
 நின்சேவை தொடரட்டும் திண்ணம்.

*05.09.1971* சுதந்திரன்.

## அண்ணா கவிதாஞ்சலி

தன்னாட்டை தன்னுடலாய்த்
தன்மொழியைத் தன்னுயிராய்
தன்னினத்தைத் தன்மூச்சாய்க்
கொண்ட அண்ணா- தன்னை
மறவாத நாளெல்லாம்
வண்டமிழ்ப்பற் றுள்ள
திறமான நாளெனவே
தேர்

*06.02.1972* சுதந்திரன்

## உணர்ச்சிக் கவிஞனே! உன்வழி தொடர்வோம்
### (சிறையிருக்கும் ஆனந்தனுக்குப் பிறந்தநாள் வாழ்த்து)

தமிழர்களாய்ப் பிறந்த சிலர் பதவி, பட்டம்
　　தன்னலத்திற் காக விந்த ஈழநாட்டில்
தமிழ் மொழியைப் பகடைக்காய் ஆக்கிஅன்னைத்
　　தமிழ் மொழியைப் பலிகொடுத்தும் வாழும் இந்நாள்

தமிழ் காக்க உயர்பதவி, வருமானத்தைத்
　　தன்னலத்தைத் துறந்து மட்டு நகரூர் தந்த
தமிழுணர்ச்சிக் கொடுமுடியே! காசி – ஆனந்
　　தக் கவிஞ! தமிழ் வாழும் வரை நீ வாழ்வாய்!

*07.04.1974* சுதந்திரன்

## திரு. சின்னப்பு கணபதிப்பிள்ளை அவர்களுக்கு இதயாஞ்சலி

மதியில்லா வான்வெளியாய் மலர்ந்த தண்டா
　　மரையில்லாப் பொய்கையதாய் வடிவுமிக்க
சுதியில்லா மிருதங்கம், ஒளிபரப்புஞ்
　　சுடரில்லாப் பெருவிளக்காய் மனைக்கண் வாடும்
பதியில்லாப் பதிவிரதை யாக நல்ஒப்
　　பனையில்லா நடிகையதாய் நுமது ஊரை
விதிசெய்த சதியாற்காண் பதினால் பொங்கும்
　　வேதனைக்கு ஈடு இணை விளம்பொணாதே!
உடல்வளர்ந்து உரமுறுதற் குணவுதவி செய்தலொப்ப
　　உள்ளம் பரந்துவிரிந் துயர்ச்சி தனை தெளிந்து
திடமுடன்யான் இலக்கியங்கள் படைத்திடப் “பாராட்டு”
　　சீவசத்தீந்தென்னையுருவாக்குஞ்சிறந்த நண்பா!(எனும்

என்னைப்போல் எண்ணற்ற கவிஞர், கலைஞர், அறிஞர்
இசைவல்லார், நற்றலைவர், மேதைகளை நின்ரசிப்பால்
முன்னேற்றக் கைகொட்டிப் புகழ்ந்தேபா ராட்டுகளால்
முழுக்கலைஞ னாக்கு "கலைஞன் மேக்கர்" நீரலவோ!
இருபத்தைந் தேநிமிடம் பழகிடினும் அவர் வாழ்நா
ளில் மறக்க வொண்ணாத கணபதிப்பிள்ளை நிதியை
இருபத்தி ஐந்தாண்டாய் இணைந்தே பழகிடும் யான்
எவ்வாறு!!!? ஐயையே! அந்தோ அருமை நண்பா!

பங்குனி 1972

## திரு. சின்னப்பு கணபதிப்பிள்ளை அவர்களுக்கு இதயாஞ்சலி

மறவாத தமிழ்ப்பற்று, இனத்தின் பற்று
மாண்புயர்த்துங் கலைப்பற்று, நாட்டுப்பற்று,
அறநெறிப்பற் று(ச்) சால்புப் பற்றுற் றென்றும்
ஆற்றல், அறி வுகட்கேற்க வாழ்நாள் முற்றும்
திறம்பாத கொள்கையாளராய்ப் பொதுத் தொண்டாற்றி(ச்)
செகத்தை, எமைப் பிரிந்து சென்றீர் ஆண்டொன்றாச்சு!
உறவினர்கள், அன்பர், நண்பர் உள்ளக் கோயில்
உங்களை வைத் தனம் வணக்கம் சாந்தி கொள்க!

பங்குனி 1973

## அண்ணாவை – வன்னியரை எண்ணுகினும்.....
### (வன்னியசிங்கம் நினைவு)

பாராண்ட வல்ல தமிழ் பண்பாடும் ஈழமண்ணில்
ஊராள் மொழியாய் உயர்வு பெறச் - சோராது
வாழ்வினையே அர்ப்பணித்த வன்னியரை எண்ணுகினும்
வாழ்வினிலுண் டாமே வளம்!

ஆழ்ந்த இனப் பற்றுளராய் அஞ்சாராய்ச் சூழ்ச்சிகளால்
வீழ்ந்த சுதந்திரத்தை மீட்பதற்கு – நாள்தோறும்
வாழ்வினையே அர்ப்பணித்த வன்னியரை எண்ணுகினும்
வாழ்வினிலுண் டாமே வளம்!

தென்னாட்டிற் தோன்றி சிறந்த தமிழ்ச் சேவையினால்
எந்நாட்டவர்க்குமுரித் தான அண்ணா – தன்னை
மறவாத நாளெல்லாம் வண்டமிழ்ப்பற் றுள்ள
திறமான நாளெனவே தேர்

*15.09.1974* சுதந்திரன்



நூலாசிரியரின் ஏனைய வெளியீடுகள்:

1. ஆத்மாவின் இராகங்கள் - கவிதை
2. தியாக பொம்மைகள் - சிறுகதை
3. பூமாலைகள் புனிதமடைகின்றன - சிறுகதை
4. நினைவுத் தூறல் - கவிதை
5. நினைவுத்தூறல் - இறுவெட்டு
6. வண்ணப் பூக்கள் - சிறுவர் பாடல்
7. கூடிக்குதிப்போம் - சிறுவர் நாடகம்
8. முதலாம் மொழி தமிழ் - தொகுப்பு
9. வன்னியூர்க்கவிராயர் சிறுகதைகள் - தொகுப்பு
10. இனியொருகாலம் இதுபோல்வருமா - வரலாறு

ISBN 978-955-99420-6-1

அகரம் பிறின்டேஸ்
024 2223772